
ISSN: 2012-6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



## எமது மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அவர்களின் போலந்துக்கான விஜயம்

ஆகஸ்ட் – 2015

40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டன்

ஆகஸ்ட் - 2015

மலர் - 47 இதழ் - 07

ஆசிரியர்

அருட்தந்தை: ரமேஷ் கிறிஸ்றி

இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்.

மட்டக்களப்பு மறை மாவட்டம்

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் – 44

மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,

திருமலை வீதி,

மட்டக்களப்பு.

# உள்ளே.....



அன்புடன் உங்களோடு ................ 01

புனித பவுஸ்தினாவின் ................ 02

அனைத்து மக்களையும் ............ 03

செல்வம் வந்துற்றபோதும் .......... 04

இலக்கிய மஞ்சரி ........................ 06

சிறுவர்கள் வாழ்வுக்கு ................ 07

சர்வதேச இளைஞர் தினம் .......... 08

தவளையும் தன் ........................ 09

வெள்ளைப்பூடு ............................ 14

உலகெங்கும் மரியாளின் ............ 16

மாணவர் பக்கம் .......................... 17

புதிய ஆயரை வாழ்த்து ................ 18

இதுதான் அரசியல் ...................... 19

திருஅவைச் செய்திகள் ................ 21

புனித பவுஸ்தினாவின் ................ 22

கத்தோலிக்க திருமறை ................ 24

புனிதர்களை அறிவோம் ............ 25

கடுகுக் கதை ................................ 26

திருவிவிலியம் கற்போம் ............ 27

அறிவை வளர்ப்போம் ................ 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com

விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு ....

கடலில் இருக்கும் அத்தனை
நீரும் ஒன்று சேர்ந்தாற்கூட
ஒரு கப்பலை மூழ்கடிக்க
முடியாது – கப்பலுக்குள்
புகுந்தால் மாத்திரமே
அது சாத்தியம்

வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும்
உங்களைப் பாதிக்கவே
முடியாது – நீங்கள்
அனுமதித்தால் தவிர

அன்னை மரியாள் தன் வாழ்க்கையிலே எத்தனையோ சவால்களைச் சந்தித்தாள். அவமானத்தின் விளிம்புக்கே சென்றாள். தன் மணவாளனால் கைவிடப்படும் நிலைக்கே கடந்து சென்றாள்.

ஊர் பழித்தது
உறவுகள் வெறுத்தது
வீண்பழி அவளைச் சுற்றி
பரவ ஆரம்பித்தது
ஆனால், இவை ஒன்றும்
அவள் நிம்மதியைக் குலைக்கவில்லை
சந்தோசத்தைக் கலைக்கவில்லை
வாழ்க்கையை அழிக்கவில்லை.

காரணம் எந்த சவால்களும்
அவள் உள்ளத்தில்
பிரச்சினையாக ஊடுருவவில்லை.
அவள் உள்ளமோ இறைவன்
பாதங்களுக்கு அர்ச்சனை மலராக
மாத்திரமே இருந்தது

இதனால்தான் அன்னை மரியாளுடைய வாழ்க்கைச் சுவடுகள் இன்று வழிகாட்டும் தத்துவங்களாக ஆன்மீக விழுமியங்களாக நம் வாழ்க்கையில் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அன்னை மரியாள் இயேசுவுக்கு தன் எண்ணத்தில் இடம் கொடுத்ததால்தான் இன்று விண்ணகத்தில் அரசியாக திகழ்கிறாள். நம் சிந்தனைகளில் எண்ணங்களில் ஒட்டுமொத்த உள்ளத்தில் தாய் மரியாளைப்போல இயேசுவுக்கு இடம் கொடுத்தால்,

எண்ணங்கள் வானுயர எழும்
சிந்தனைகள் சிறகடித்துப் பறக்கும்
நம் செயல்களில் கிறிஸ்தவம் உயிர்க்கும்

ஒருவேளை நமக்குள் இந்த மாற்றங்கள் ஏற்படும்போது நம்மைக் காண்கின்றவர்கள்

பொறுமையும் பணிவும்
அதிகமானால் கோழை என்பர்
அன்பும் இரக்கமும்
அதிகமானால் ஏமாளி என்பர்
புன்னகையும் வெகுளித்தனமும்
அதிகமானால் பைத்தியம் என்பர்
கோபமும் கேள்வியும்
அதிகமானால் திமிர் என்பர்
மொத்தத்தில் மனிதனிடம்
இருக்கவேண்டிய எதுவுமே
இல்லாதவனைத்தான் இங்கு
மனிதன் என்பர்

இருந்த போதும் நீ மனிதனாக வாழாவிட்டாலும் கிறிஸ்தவனாக வாழ முயற்சிசெய்!

ஆசிரியர்

இறைவாக்கு

"நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வழியாய் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம்" (உரோமையர் 5:1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# புனித பவுஸ்தினாவின் திருப்பண்டம்

எமது மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய: கலாநிதி: யோசப் பொன்னையா ஆண்டகை கடந்த ஆனித் திங்கள் 11ந் திகதி முதல் 19ந் திகதி வரை தமது போலந்துக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். அங்கு தங்கியிருந்த நாட்களில் இவர் புனித பவுஸ்தினா சம்பந்தமான வரலாற்று நிறைவுகளைத் தரிசிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். இந்த வேளையில் அவருக்குக் கிடைக்கப்பெற்ற புனித பவுஸ்தினாவின் திருப்பண்டமானது எமது மறை மாவட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.



இப்புனித ஞாபகச் சின்னமானது ஆடித்திங்கள் 13ம் நாளன்று (13.07.2015) திங்கட்கிழமை, தூய மரியாள் பேராலயத்தில் பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டுள்ளது. இறை இரக்கப் பக்தி புனித பவுஸ்தினாவின் மூலமே உலகில் பரவியமை கத்தோலிக்கர்கள் அனைவரும் அறிந்த விடயமாகும். எதிர்காலத்தில் இறை இரக்க ஆலயம் ஒன்று எமது மறைமாவட்டத்திலும் உருவாகி பவுஸ்தினா வழியாகத் தோன்றிய பக்தி முயற்சி இன்னும் அதிகமாக எமது மறைமாவட்டத்தில் வளரும் என்பதில் ஐயப்பாடில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களையும் அன்போடு அரவணைக்கும் அற்புத அன்னை மருதமடு அன்னை



இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் அண்டிச் செல்லும் அன்பு அன்னை மருதமடு அன்னையாகும். இறந்தோரை நினைவுகூரும் கார்த்திகை மாதம் தவிர ஏனைய எல்லா மாதங்களிலும் திருவிழாக்கள் நடைபெறும். மருதமடு அன்னையின் வரலாறு சுவைமிக்க தொன்றாகும்.


போர்த்துக்கேயரின் ஆதிக்கம் இலங்கையில் ஆரம்பமாகு முன்னரே மன்னாரிலுள்ள 'மாந்தை' என்னும் இடம் ஒரு வியாபாரத் துறைமுகமாகத் திகழ்ந்தது. அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து மன்னாருக்கு வருகை தந்த அருட்பணி பிரான்சிஸ் சவேரியாரால் கத்தோலிக்க மதம் பரவியது. மன்னாரில் மட்டுமல்ல, அதை அண்டிய கிராமங்களிலும் கத்தோலிக்க மதம் பரவியது. மருதமடு அன்னையின் புராதனத் தலமாகிய மாந்தையும் பிரபல்யமாயிற்று. போர்த்துக்கேயரின் உதவியுடன் மாந்தைக் கிராம மக்களால் செபமாலை அன்னையின் பெயரால் ஓர் பெரிய ஆலயம் கட்டப்பட்டது. எளிமை மிகுந்த மாந்தைக் கத்தோலிக்க மக்கள் செபமாலை அன்னையின் பாதுகாவலில் தங்கள் சமயத்தை அனுசரித்து வந்தனர். அன்னை மரியாளும் தனது அருள் வெள்ளத்தில் அவர்களை நீந்த வைத்தார். வாழ்விழந்து அங்கலாய்த்து அலைந்து திரிந்த கத்தோலிக்க மக்களின் விடிவிளக்காக மருதமடுத் திருத்தலம் மாறியது. கால வெள்ளம் கடந்தோடி மறைந்தது. கண்டி அரசர்களும், வன்னி அரசர்களும் ஆண்ட காலத்திலே அந்நியர் எதிர்ப்புக் காலமாக அமைந்திருந்தபோது சிங்கள மக்களும் அன்னை மரியாளை வணங்கிச் சென்றனர். மருதமடுக் குளத்தில் நீராடுவதும், பழைய ஆலயத் திருமண்ணை எடுத்துச் செல்வதும் அருள் பெருக்குவதாக இன்றும் நம்பப்படுகின்றது.

1656ம் ஆண்டில் போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் இல்லாதொழிக்கப்பட்டபோது ஒல்லாந்தர் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். அவர்கள் கத்தோலிக்க ஆலயங்களைத் தமது படையணிகளின் மண்டபங்களாகவும், ஆயுதக் களஞ்சியங்களாகவும் மாற்றினர். அச்சமயம் மாந்தைக் கத்தோலிக்க மக்கள் தங்கள் சுரூபத்தைப் பாதுகாப்பான இடமொன்றுக்குக் கொண்டு செல்லத் திடமாக எண்ணி ஊர் மக்களின் உத்தரவுடன் இருபது குடும்பங்கள் 1670ம் ஆண்டு கண்டி இராச்சியத்திற்குப் புறப்பட்டனர். அந்நியர் ஆட்சிக்குப் பயந்து அக்குடும்பங்கள் வன்னிக் காட்டில் அலைந்து திரிந்தன. இறுதியாக கண்டிக்குப் போகும் பாதையில் பழைய குளம் ஒன்றிருந்தது. அதற்கு அண்மையில் இருந்த கிராமத்துக்கு அம்மக்கள் தெய்வாதீனமாகச் சென்றடைந்தனர். அக் கிராமத்தின் பெயர் "மருதமடு". அங்கே கண்டி அரசனுக்குச் சொந்தமான திரைசேரியுமிருந்தது. மாந்தைக்.....

தொடர் 5ம் பக்....

-குறுங்கதை - 17 -

# செல்வம் வந்துற்ற போதும்....



- வீக்கேயெம் -

இவன் தன் மனைவியைத் தலைப்பிரசவத்தின் பொருட்டு அரச மருத்துவமனைப் பிரசவ விடுதியில் அனுமதித்துவிட்டுக் காத்திருந்தவேளை அது!

இவன் மனையாள் படுத்திருந்த கட்டிலின் நேரெதிரே, அந்தப் பிரதேசத்தில் பெயர் பெற்றிருந்த தனியார் மருத்துவமனையின் பிரபல மருத்துவர் ஒருவரின் மனைவியும், அவளருகில் அவரது சகோதரியும் இவளைப்போலவே பிரசவத்திற் காகக் காத்திருந்தார்கள்.

இரண்டொரு தினங்களில் அவர்களிருவருக்கும் பிரசவமாக லாம் என்று பக்கத்தில் இருந்தவர் கள் பேசிக்கொண்டார்கள்.

இவளுக்கும் நாட்கள் நெருங்கிய போதும், சத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத் தில் இருந்ததால் மூவருமே காத்திருந்தார்கள்.

மறுநாள் -

அந்தப் பிரபல தனியார் மருத்துவமனையில் சுகப் பிரசவத் திற்காகக் காத்திருந்த வசதி படைத்த ஒருவரின் மனைவியை, சுகப் பிரசவமாகாமல் இடைநடுவே சிக்கித் தவித்ததால், பன்னீர்க்குடம் உடைந்த நிலையில், இதே அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனைக்குக் கொண்டு வந்திருப்ப தாகப் பேசிக்கொண்டார்கள்.

லேபர் ரூமில் அவள் ஆர்ப்பரித்து அரற்றும் கூக்குரலோசை, செவிப்பறையதிர ஒலித்தது.

'வசதி வாய்ப்புகள் இருந்தால் எங்கே யும் எப்போதும் பிரசவிக்கலாம்' என்கிற மமதையில், நேரம் வரும்வரை பாராமுக மாயிருந்துவிட்டு திடீரெனப் புறப்பட்டதால் வந்த வினையென்று பார்வையாளர்களில் ஒருவர் கூற....

"அந்த மனிசன் என்ன வசதியில்லா தவரா....? அதுவும் பிரபலமான ஒரு டொக்டர் ..... தன்ர மனிசியையும், தங்கச்சியாரையும் இங்கை கொண்டுவந்து சேர்க்கையில் லையா? இதையெல்லாம் தெரிந்துகொள்ளா மல் பணத் திமிரிலை நின்றாடினவை. இப்ப படுற பாட்டைப் பாருமன்....!"

என்று, மற்றவர் அவர் காதில் குசு குசுக்க, கூட நின்றவர்கள் சிரித்தது ஏனென்று அந்தப் பிரமாண்ட சரீரத்தோடு படுக்கையில் புரளமுடியாமல் புரண்டு கொண்டிருந்த இரு பெண்களுக்கும் தெரிந்தி ருக்க நியாயமில்லை.

ஏனெனில், பார்வையாளர் நேர மென்பதால், வந்திருந்தவர்கள் கலகலத்த தில் அது மறைக்கப்பட்டுவிட்டது.

அவர்களிருவரும் இந்த விடயம் புரியாமல் -

"எங்கை ..... இவரை இன்னும் காணயில்லை?"


என்று டொக்டரின் மனையாளும்,

"அதுதானே ...... அண்ணர் ஏன் இன்னும் வரயில்லை?"

என்று மற்றவளும் வாய்விட்டுக் கதைப்பதைக் கேட்டு , மனதுக்குள் சிரித்துக் கொண்டான் இவன்.

○ ● ○

## எவ்வளவு நேரம் ....?



கேரம் போர்டு விளையாட்டில் தன் கைக்கு ஸ்ரைக்கர் வந்து 15 விநாடிக ளுக்குள் அதைச் சுண்டிவிட வேண்டும், என்று ஒரு விதி உண்டு. அதேபோல கிரிக்கெட்டில் (டெஸ்ட் மெட்ச்) ஒரு பேட்ஸ்மென் அவுட்டாகி வெளியேறிய இரண்டு நிமிடங்களுக்குள் அடுத்த பேட்ஸ்மென் களத்தில் இறங்க வேண்டும்.

3ம் பக். தொடர் ...



..... கத்தோலிக்க மக்கள் மரியன்னைக்கு நன்றியாக அந்நாளைச் செபத்திலே செலவிட்டனர். அவ்வேளை யாழ்ப்பாணத்தில் வேதகலா பனை மிகவும் உக்கிரமமாகப் பரவ ஆரம்பித்தது. ஆனால், மருதமடுவிலோ அற்புதமாக அமைதி நிலவியது. அவ்வேளை டச்சுக்காரரின் கொடுமை தாங்காது 700 கத்தோலிக்கர் 7 குருக்களுடன் யாழிலி ருந்து புறப்பட்டு அற்புதமாக மருதமடுவைச் சென்றடைந் தனர். அவர்களும் மருதமடு அன்னையின் பாதத்தில் அவளின் அரவணைப்பில் அமைதியாக வாழ்ந்தனர். அவ்வேளை யாழில் வசித்த போர்த்துக்கேயத் தலைவனின் மகள் இலேனாவும் அங்கிருந்தாள். அவள் மிகவும் தெய்வ பக்தி கொண்டவள்; நற்குணம் உள்ளவள். மக்கள் அவளைப் புனித இலேனா என்றழைத்தனர். காலங் கடந்ததும் மடுவிலுள்ள திறைசேரியில் தொழில் புரிந்த ஓர் இளைஞனை அவள் திருமணம் செய்தாள். இலேனா அன்னை மரியாளுக்கு அவ்விடத்தில் ஆலயம் ஒன்றைக் கட்டினாள். அதைக் கண்ட கத்தோலிக்கர் அவளுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவ்வாலயத்திற்கு "இலேனா மருதமடு" என்று பெயர் சூடினர்.

இன்று ஆடி, ஆவணித் திருநாட்களில் விஷேட விதமாக இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்து இன, மொழி வேறுபாடின்றி இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். மருதமடு அன்னையின் பக்தி வளர வேண்டுவோம்.

அருட்சகோதரி: லூர்ட்ஸ் F.M.M



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய



— ஆழியோன் —

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் குறிக்கோள் இருக்கும்; இருக்கவேண்டும். அக் குறிக்கோளையடைய அவர்கள் பாடுபட வேண்டும். ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற ஒரு இளைஞன் பின்வருமாறு சொல்லியுள்ளான்.

"எனக்கு 13 வயதாக இருந்தபோது ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெறுவதாகக் கனவு கண்டேன். ஆனால், அப்போது அது பற்றிய திட்டமான எண்ணம்கூட எனக்கு இருக்கவில்லை என்றாலும் அது என் வாழ்வின் இலட்சியமாகிவிட்டது. அதன் காரணமாக 14 ஆண்டுகளுக்குப் பிற்பாடு 2008ல் பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் கிடைத்தது"

ஒருவனின் வெற்றிக்குப் பல மனிதர்கள், பல நிகழ்ச்சிகள் பங்களிப்புச் செய்திருக்கலாம். ஆனால், அவனின் எண்ணம் மட்டும் குறிக்கோளாய் அமைந்து, அது பற்றிக் கனவு கண்டு அவன் உடலின் ஒவ்வொரு பாகமும் வெற்றியின் நோக்கத்தில் உந்தப்படாமல் இருந்தால், அவன் வெற்றி பெறுவது இலகுவான காரியமல்ல.

வெற்றி பெறுவது என்பது எமது பிறப்புரிமையல்ல. ஆனால், அவற்றை நாம் அடைய வாய்ப்புண்டு. வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணம் எம் இதயத்தில் நிரம்பிவிட்டால், 'நான் வென்றுவிடுவேன்' என்று நாம் ஒவ்வொருவரும் உறுதிபட நம்ப வேண்டும்.

ஒரு சுவாமிகள் பின்வருமாறு சொல்கின்றார்:

"ஒரு கருத்தைத் தெரிவுசெய்துகொள். அந்த ஒரு கருத்தையே உன் வாழ்வில் மையமாக்கு. அதையே கனவு காண். அக்கருத்தையொட்டியே வாழ்ந்து வா. மூளை, தசைகள், நரம்புகள், உன் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்தக் கருத்தே நிறைந்திருக்கட்டும். அவ்வாறான நிலையில் மற்ற எல்லாக் கருத்துகளையும் தவிர்த்துவிடு. வெற்றிக்கு இதுதான் வழி.

இங்கு இன்னொரு சிக்கல் உண்டு. ஒரு முறை வென்றால், அடுத்த முறையும் வெல்ல வேண்டும் என்ற நியதி இல்லை. வெற்றி பெற்ற ஒவ்வொருவருக்கும் ஒரு கவலை வரும். அடுத்த முறை வெற்றி பெறுவேனா? வெல்லலாம்; வெல்லாமலும் போகலாம். திறமைகள் காலை வாரியும் விடலாம். சரி! தோற்றுப்போய் விட்டோம் என்று வைத்துக்கொள்வோம்; அதற்காகக் கவலைப்படாமல் காயங்களை ஆற்றிக்கொள்வோம். அறிவாற்றலையும், தன்னம்பிக்கையையும் நாடுவோம்; இறைவனை வேண்டுவோம்; ஆணவத்தை விட்டொழிப்போம்; மீண்டும் வெற்றி எமக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் மையமாகக் கொண்டு அமைவதே அர்ப்பண வாழ்வு ஆகும். இறைவன் மக்கள் மீது அன்பு கொண்டதால் தம் ஒரே மகன் இயேசுக் கிறிஸ்துவை அர்ப்பணித்தார். இது ஆன்மீக வாழ்வில் அர்ப்பணம் எனலாம். உலக ரீதியில் பார்க்கையில், ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால், அன்பின் காரணமாக ஒருவர் ஒருவருக்குத் தம்மை அர்ப்பணித்து வாழ்வதைக் காணலாம். இதுவே நியதி. இவ்வாறான அர்ப்பணம் எமது வாழ்வுக்கும் சிறப்பளிக்கவல்லது தனது நற்செய்தியிலே 2ம் அதிகாரம் 52வது திருவசனத்தில் "இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" என்று எழுதியுள்ளார்.

நாம் கடவுளின் குழந்தைகள். எனவே, குழந்தை இயேசு போல வாழ முன்வர வேண்டும். அவர் நமக்கான தமது அர்ப்பண வாழ்வை, குழந்தைப் பருவத்தில் இருந்து ஆரம்பித்தவர்



# சிறுவர்கள் வாழ்வுக்கு



# சிறப்பளிக்கும் அர்ப்பண வாழ்வு!

என்றால் அது மிகையாகாது. நாம் பெற்றோரின் பாதுகாப்பில் வாழவேண்டும். இதனை உணர்ந்து வாழ்வதே நன்மை பயக்கும். நாம் வாழத் தம்மை அர்ப்பணித்தவர்கள் எமது பெற்றோரும், சகோதரரும். அவர்களால் கிடைக்கும் உதவிகள் இல்லையென்றால் எங்களால் வாழமுடியாது. அதாவது, அவர்களது அர்ப்பணம் இல்லாது தனித்து வாழ முடியாது என்பது நிச்சயம். எனவே, அவர்கள் காட்டும் வழியில் செல்வதே எமக்குச் சிறப்பளிக்கும் என்பது திண்ணம்.

எம் பெருமான் இயேசு கூடச் சிறு பராயத்தில் நல்லதொரு குழந்தையாகவே இருந்ததை நற்செய்தியின் ஒளியில் நாம் அறிகிறோம். நற்செய்தியாளர் புனித லூக்கா என்பதை இத்திருவசனம் எமக்குத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது.

கீழ்ப்படிதல், அன்பு செய்தல், ஒழுக்கமுடன் வாழ்தல், கடமையுணர்வு, செயலில் திறமை, நீதி, நேர்மை, அகத்தூய்மை, உண்மை பேசுதல், இறை பக்தி, அன்றாடம் செபித்தல் போன்ற பல நற்பண்புகளைச் சிறுவயதில் இருந்தே நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். எம்மிடம் அர்ப்பணம் உண்டானால், இவையனைத்தையும் நாம் இலகுவாகக் கற்றுக்கொள்ள முடியும். அவ்வழியில் நாம் வாழ்ந்தால் எம் வாழ்வு மிகச் சிறப்பானதாக அமையும் என்பது நிச்சயம் ஆகும்.

~ மெற்றில்டா இராஜேந்திரம் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச இளைஞர் தினம்



**இ**க்கிய நாடுகள் சபை அங்கீகாரத்துடன் சர்வதேச இளைஞர் தினம் ஆண்டு தோறும் ஆவணித் திங்கள் 12ந் திகதி கொண் டாடப்படுகின்றது. ஒரு நாட்டின் சொத்துக்களாகக் கருதப்படும் இளைஞர்களை நெறிப்படுத்திச் சரியாக, ஆக்கபூர்வமாக ஆற்றுப்படுத்துகையில் சிறந்த எதிர்காலமொன்றை நாம் உருவாக்கிவிடலாம்.

1998ம் வருடம் ஆவணித் திங்கள் 8ந் திகதி முதல் 12ந் திகதி வரை லிஸ்பன் நகரில் நடந்த உலக நாடுகளின் இளைஞர் விவகார அமைச்சர் குழு இளைஞர்க்கான சர்வதேச தினம் ஒன்றைச் சிபாரிசு செய்தது. இதன் பிரகாரம் 1999ம் வருடம் மார்கழித் திங்கள் 17ம் திகதியன்று ஐ.நா.சபையின் பொதுச் சபையின் 54/120 *(Resolution 54/120)* இலக்கப் பிரேரனைப்படி சர்வதேச இளைஞர் தினம் ஆவணி 12ம் திகதி கொண்டாடத் தீர்மானிக் கப்பட்டது. எனவே, 2000ம் ஆண்டு முதல் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

நமது வாழ்வை உடலியல் அடிப்படையில் குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் என மூன்றாக வகுக்கலாம். பொதுவாக 18 வயது தொடக்கம் 29 வயதுவரை இளமைப் பருவம் எனப்படுகின்றது. இப்பருவம் மாற்றங்களை இலகுவில் ஏற்றுத் தன்னை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியது, துணிவுமிக்கது, செயற்பாட்டை முதன்மைப்படுத்துவது. அப்பருவத்தில் பாலியல் கவர்ச்சியும் ஈடுபாடும் இருக்கும். இளையோர் சமூகம் வன்முறைப் போக்கில் செல்லக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு என்றும் கூறப்படுகிறது.

சுவாமி விவேகானந்தர், "இளைஞர்கள் நூறு பேரை என்னிடம் கொடுங்கள், இந்திய நாட்டையே நல்ல நாடாக மாற்றிக் காட்டுகிறேன்" என்று கூறியது இளைஞரின் பெருமையை எடுத்துக்காட்டுகிறது. உத்வேகம், அர்ப்பணிப்பு, நாட்டுப்பற்றுமிக்க இளைஞரை வழிநடத்திச் செல்லக்கூடிய இளமை, துடிப்பு, சுயநலமின்றி பாடுபடும் அர்ப்பணிப்பு, ஞானம் மிகுந்த விவேகானந்தரைப் போல் ஒரு வழிகாட்டிதான் இன்று தேவையாகிறது.

இன்றைய இளைஞர்கள் தம் திறமைகளை வெளிப்படுத்தித் தம் நாடுகளின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக உள்ளனர். கடுங்குளிர், மிகுந்த வெப்பம் என எந்த நிலையிலும் பணிபுரியும் தகுதி பெற்றவர்கள். உடலாற்றலிலும், அறிவாற்றலிலும் சிறந்து விளங்குபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் பல முன்னோடி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளைத் தம் தகுதியால் அலங்கரிப்பவர்கள். சுயகௌரவம் பாராது, குடும்பப் பொறுப்புடன் செயற்படுபவர்கள். சிக்கலான கல்வி கற்பதில் முன்னணியில் நிற்பவர்கள். தமக்கெனத் தனிப்பாதையை வகுத்துக்கொண்டு அதில் திறமையுடனும், துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் பயணிப்பவர்கள்தான் இன்றைய இளைஞர்கள் என்றால், அது மிகையாகாது.

இன்றைய இளைஞர்கள் ஒரு தலைவரை அல்லது தனியொருவரைப் பின்பற்றும்போது முற்றாக அவராகவே மாறிவிடக்கூடாது. மாறாக, நல்ல பண்புகளை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை விவேகானந்தர் அழகாகக் கூறுகிறார். "ஒரு விதையை நிலத்தில் போடுகிறோம். அதன் வளர்ச்சிக்குத் தேவையான எரு, தண்ணீர் ஆகியவற்றை அளிக்கிறோம். அவ்விதை எருவாகவோ, தண்ணீராகவோ மாறாமல் தன் இயல்பிலேயே எடுத்துக்கொண்டு பிரமாண்ட மரமாகிறது". அதுபோல கற்றுக்கொள்ள வேண்டியதை மட்டும் கற்றுக்கொண்டு வாழ்க்கையில் முன்னேற வழி சொல்கிறார். "அளவற்ற தன்னம்பிக்கை உடையவர்களாக இருங்கள். நான் இளமையில் அத்தகைய நம்பிக்கையுடையவனாக இருந்தேன். அதுதான் இப்பெரிய காரியங்களைச் செய்யக்கூடிய சக்தியை எனக்களித்தது. இளமையும், சக்தியும், நம்பிக்கையும் இருக்கும் காலத்தில்தான் உங்கள் எதிர்கால இலட்சியத்தை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்" எனக் கூறித் தன்னம்பிக்கையை ஊட்டுகிறார்.

தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றன. தன்னம்பிக்கையோடு திட்டமிட்டு, விடாமுயற்சியோடு செயல் வடிவம் கொடுக்க வேண்டும். "Never>neer>neer give up" என்று வின்ஸ்டன் சர்ச்சில் சொல்வதுண்டு. வீட்டில் ஜன்னலருகே வைக்கப்பட்டுள்ள செடியானது வெளிச்சம் தேடி வெளியே வளைந்து செல்வதைப் போல, விடா முயற்சியுடையவர்கள் புதிய பாதைகளைத் தேடிக்கொண்டு தொடர்ந்து முன்னேறுவர்.

வெற்றி பெற்றவர்கள் அனைவரும், மற்றவர்கள் உறங்கிக்கொண்டிருக்கையில், தாங்கள் மட்டும் விழித்திருந்து உழைத்தவர்களே. சலிப்புக்கு இடங்கொடாமல் கடும் உழைப்பை உணவாக உட்கொண்டவர்கள். "ஒளி படைத்த கண், உறுதி கொண்ட நெஞ்சம், களி படைத்த மொழி, கடுமை கொண்ட தோள், தெளிவு பெற்ற மதி" என்றெல்லாம் முகமன் கூறிய பாரதியின் வார்த்தைகளை இன்றைய இளைஞர் தம் வாழ்வாக்க வேண்டும். குறுகிய சிந்தனையில் வாழ்வைக் குலைத்துக் கொள்ளாது, சமுதாய நோக்கில் சிந்தித்துச் செயல்பட்டால் இளைஞர்கட்கு வெற்றி நிச்சயம்.

சர்வதேச இளைஞர் தினம் முதன் முதல் 2000ம் ஆண்டில் நடைபெற்றபோது முறைப்படி இத்தினத்தைக் கடைப்பிடிக்க உறுதிமொழி எடுக்கப்பட்டது. சர்வதேச இளைஞர் தினம் கலை நிகழ்ச்சிகள், போட்டி நிகழ்வுகள், பாசறைகள், கலாசார நிகழ்ச்சிகள், விளையாட்டுகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக முன்னெடுக்கப்படுகின்றது.



ஒவ்வொரு வருடமும் இத்தினத்தை ஒவ்வொரு கருப்பொருளை மையமாக வைத்து நடாத்தி வருகின்றனர். வேலையின்மை, சுகாதாரம், தொழில் வாய்ப்புகள், சமூக அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, காலநிலை மாற்றம், நேர முகாமைத்துவம், உற்பத்திச் செயற்பாடுகள் பற்றிய இளைஞர்களின் சவால்களும், எதிர்காலம் பற்றியும் இதுவரை கருப்பொருட்கள் அமைந்திருந்தன. குறிப்பாகச் சூழல், சமூக பொருளாதாரம் ஆகிய செயற்பாடுகளில் இளைஞர்களின் மனோநிலை விருத்தியை வளர்ப்பது குறித்தும், இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொணருவது குறித்தும் இத்தினத்தில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையணையும் நீள் பின்னங்கால்கள்



கிறிஸ்டி முருகுப்பிள்ளை

சேவல்
கூவும் சத்தம்
கேட்டது .....
கண்களைத்
திறக்காமலேயே தலையணையின் அடியில் கிடந்த செபமாலையை எடுத்துக் கண்களில் ஒற்றியபடி

"ஆண்டவரே ..... இன்றைய பொழுதை உம்மிடம் ஒப்படைக்கிறேன் .... இன்று முழுவதும் எம்மை வழிநடத்தும் இயேசுவே ......!"

என்று வாயில் முணுமுணுத்தபடி கண்களைத் திறக்கிறேன். நேரத்தைப் பார்த்தேன் ......

ஐந்தரை மணி!

பொழுது புலர்ந்தும் புலராத வேளை ..... இருள் விலகும் நேரந்தான் ..... வீட்டுக் கதவைத் திறந்து வெளியே செல்ல நினைத்தாலும் நெஞ்சில் ஒருவிதத் தயக்கம்.

சற்றுப் பொறுப்போமே...

பிள்ளைகள் மூவரும் தலையணைகள் வேறு எங்கோ கிடக்க.... தாறுமாறாக நித்திரை கொள்கின்றனர். மனைவியைக் காணவில்லை.

குசினிக்குள் லைற் எரிகின்றது....

என்ன நடந்தாலும் ..... ஏது நடந்தாலும் தன் கடமையைச் சரிவரச் செய்தாக வேண்டிய நிலை ... ஏன் கட்டாயம். காலையுணவு, மதிய உணவு என்பவற்றை ஒழுங்குபடுத்தினால் தான் தனது ஆசிரியர் பணியைத் தொடரமுடியும்!

நேரமாகிவிட்டது.

மெல்ல எழுந்து கதவைத் திறந்தேன் ....

"ஆயுபோவன் மாத்தயா ....."

நெஞ்சு ஒரு கணம் துணுக்குற்றது.

"பயவெண்ட எபா .... ஒயா மே ஸ்கூலே விதுகல்பதி நேத...?"

"ஒவ் மாத்தயா...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அபி மே கமே றவுண்டப் கரணவா .... கட்டிய ஒக்கோம ஸ்கூலே பரிசரயட எண்ட கியலா தியன்னே .... கருணாகர கேற் யதுர அரங் எண்ட..."

உத்தரவா.... வேண்டுகோளா.....?


மறு பேச்சுப் பேச முடியாது. பல தடவைகள் இவ்வாறே நடந்துள்ளன.

"ஓ கொல்லன்கே கட்டிய அத்தன யண்ட அவஸ்ய ந ..... அபி மெத்தன இன்னவா நே...."

அவரசமாக ஸ்கூல் திறப்பையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். நூறு மீற்றர் நடந்தால் பிரதான வீதியில் ஏறி விடலாம்..... வீதிக்கும் ஸ்கூலுக்கும் இடையில் வருடம் முழுவதும் தாராளமாக நீர் நிரம்பி ஓடும் வாய்க்கால் இருந்தது. அது இக் கிராமத்தின் வளம். வடக்குப் பக்கம் மூன்றாம் கட்டை மலைத் தொடரும், கிழக்குப் பக்கம் அல்லை ஆறும், ஏனைய இரு பக்கங்களிலும் தங்கு தடையின்றி இரு போகம் செய்யக் கூடிய பொன் விளையும் பூமி .... வாழை ... பலா... விளா... தென்னை என்பவை தாராளமாக வளர்ந்து பச்சைப் பசேலென்று காட்சி தரும் கிராமம் ..... யாருடைய கண்பட்டதோ என்னவோ தற்போது அடிக்கடி றவுண்ட் அப்... ஆட்கள் பிடிபடுவதும்... சனங்களின் ஒப்பாரிச் சத்தமும் கண்ணீரும்... என அல்லோல கல்லோலப் படத்தான் செய்தது. எம்மால் என்னதான் செய்ய முடியும் ...



**ம**ட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் வருடாந்தம் நிகழ்த்திவரும் **"உலகத் தொடர்பாடல் தினம்"** இவ்வருடம் புரட்டாதித் திங்கள், 19ந் திகதி காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு **சாள்ஸ் மண்டபத்தில்** நடைபெறும்.



ஒவ்வொருவரும் புனையப்பட்ட காரணங்களால் பிடிபடும் வரையில்தான் இக் கிராமம் ..... பிறகு யாருக்குமே தெரியாது அவர்களின் நிலைமை பற்றி. பிடிபட்டவர்களின் குடும்பங்கள் துன்பத்திலும் ... துயரத்திலும் .... வறுமையிலும் பீடிக்கப்பட்டவையாக எதிரியிடமே சென்று முறையிடும் பரிதாப நிலை தொடர்ந்தது...

பாடசாலையை அடைந்து கேற்றைத் திறந்தேன்.... வீதியிலும் பாடசாலைக்குள்ளும் பச்சைச் சீருடைகள் நிறைந்திருந்தன...

"ஆ... ஆ... எண்ட மாத்தையா ..."

"விதுகல்பதி நே த? புட்டுவ டிக்காக் மேசய டிக் காக் ஓண ..... தெனவாத ....?"

"ஒவ் சேர்..."

தேவையானவற்றை எடுத்துக் கொடுத்தேன்... தொடர்ந்தும் அங்கே நிற்க விரும்பாமல் .... தொடரப்போகும் ஒப்பாரிச் சத் தங்களைக் கேட்க மனமொப்பா மல் ...

"மங் யனவாத சேர்..."

"ஒவ் .... ஒவ் ...... பொஹோம ஸ்துதி ..... கெதரே இன்ட எளிய யண்ட எப்பா .... அபே கட்டிய அத்தன இன்னவா நே த ....."

"ஒவ் சேர்...."

ஏதோ இறைவன் தந்த கொடையால் கிடைத்த ஓர் அதிபர் பதவி என்னைக் காப்பாற்றுகிறது..... நன்றி ஆண்டவரே....!"

வீட்டை நோக்கி நடந்தேன்.

அங்கு நின்ற சீருடையினருக்கு என் மனைவி தேநீர் வழங்கிக்கொண்டிருந்தாள். வழக்கமான செயற்பாடு ஆதலால், நான் எதுவும் பேசாமல் வீட்டினுள் சென்றேன்.

பத்து ... பதினொரு மணி மட்டில் எனக்கு அழைப்பு வரும். அதுவரை காத்திருந்தேன்.. றவுண்ட் அப்பில் பிடிக்கப்பட்டவர்களில் மாணவர்கள் என இனங்காணப்பட்டவர்களை உறுதிப்படுத்த வரவு இடாப்பு சமர்ப்பிக்க வேண்டும்.

வழக்கம் போல எல்லாமே நடந்தது.... ஒப்பாரி ... அழுகை, கெஞ்சல்கள்... விசாரணை... மாணவர் விடுவிப்பு... தட்டிக் கேட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமில்லை .... ஆரம்பத்தில் தட்டிக் கேட்டவர்களின் விலாசம் அழிக்கப்பட்டுவிட்டது. அழவும், உண்ணவும் மட்டுமே வாய் திறக்க வேண்டும்.... நாம் வித்தியாசமாக என்ன கதைத்தாலும் கருத்தைச் சொன்னாலும் மறு கணம் உரியவர்களிடம் தெரிவிக்க ஊருக்குள் நிறைய 'ஆட்கள்' கலந்திருந்தனர். அடிமைச் சங்கிலி போடாத குறை மட்டுமே மீதமாக இருந்தது ....

ஈவிரக்கமில்லாமல் தொடர்ந்த வதைகள் ..... உடல்வாதைகள் .... மனக்காயங்கள் ..... உணர்வற்ற பிண்டங்களாக எம்மை மாற்றி விட்டன.

நீர்ப் பிரச்சினையால் கிழக்கில் தீவிரப்பட்ட யுத்தம்... நீர் எல்லையில் வடக்கில் முடிவடைந்தது ... எத்தனையாயிரம் உயிர்கள் .... அங்கவீனர்கள் ... விதவைகள் ... கண்ட பின் தான் போர் மேகம் சாந்தி கண்டது .....

ஆனாலும், போனவர்கள் திரும்பவேயில்லை....

முறைப்பாடுகள் ..... போராட்டங்கள் ..... உண்ணாவிரதங்கள்.... ஆணைக் குழுக்கள் .... விசாரணைகள் முடிவில்லாமல் தொடர்ந்தன. வெற்றி விழாக்களும் வருடா வருடம் நடந்தேறின... ஐந்து வருடங்களாக!

அத்தனை இழப்புக்கும்.... துயரத்திற்கும்.... கண்ணீருக்கும் யார் வகை கூறுவது .... வகை கூற வேண்டியவர்களே எம்மை ஆளும் போது ஆறுதல் சொல்வார் யார்?

அப்போதுதான் அந்தத் தேர்தலும் வந்தது ... எங்கள் தேவாலயத்தின் திருவிழா கொடியேற்றத்துடன் சிறப்பாக ஆரம்பமாகியது. திருவிழாவின் இறுதிநாள் ஆயரவர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நடந்த சம்பவங்களை மறக்கமுடியாமல்... நடப்பவற்றில் இன்பம் காணும் மனித சுபாவம்... "காயத்தை உண்டாக்குவதும் காலம்... ஆற்றுவதும் காலம்...." எத்தனை நிதர்சனம் ...

ஆலயத்தின் முற்றத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. வெளியூர் இறைமக்கள் அநேகர் இம்முறை திருவிழாவுக்கு வருகை தந்திருந்தனர். வாய்க்காலில் சுகமான குளியல்... சுவையான அன்னதானம் .... பழவகைகளின் அன்பளிப்பு என்று பல காரணங்களோடு இருதயநாதரோடு மக்கள் கொண்டிருந்த பக்தியும் அவர்களின் வருகையை அதிகரித்திருந்தன...

நான் கொடி மரத்தருகே நின்றிருந் தேன். நேரமாக நேரமாக அவ்விடத் தில் நிழல் வரும்... பல வருட அனுபவங்களின் வெளிப்பாடு....

கொடி மரத்தோடு சேர்த்துக் கட்டியவாறு பல சேவல்கள், தென்னங் கன்றுகள், ஒரு சில ஆடுகள். சேவல்களின் இருகால்களும் கட்டியிருந்தபடியால், 'கொக் .... கொக்...' என வாயால் சத்தமிட்டபடி வெயிலின் அகோரம் தாங்கமுடியாமல் சோர்ந்து படுத்திருந்தன.

அப்போது எனக்கு அருகில் நின்றிருந்தவரின் மகன் ... வயது மூன்றிருக்கும்.... சுட்டி .... தகப்பனைத் தூக்கிக் காட்டும்படி கூறிப் பலிப் பூசையை அவதானித்தவனின் கவனம் திரும்பிச் சேவல்களின் மீது விழுந்தது. என்னோடிருந்தவர்கள் புன்னகைத்தபடி சிறுவனின் குறும்பை ரசித்துக் கொண்டு இருந்தனர்.

சிறுவன் இறங்கி மெல்ல மெல்ல நடந்து சென்று அச் சேவல்களைத் தடவினான். நான் சேவல்களின் சார்பில் எம் மக்களின் வாழ்வைச் சம்பந்தப்படுத்தியபடி அவதானித்தேன்... சிறுவனின் தடவல் தொடர்ந்தது.... சேவல்கள் சற்று அசைந்து கொடுத்தன. எங்கும் ஓட முடியாதே ...

இது பையனுக்குச் சற்று உற்சாகத்தைக் கொடுத்தது. தொடர்ந்தும் சேவல்களைத் தீண்டினான். பிள்ளையின் செயலைத் தடுக்க வேண்டியவர்கள் அவனின் குறும்பை ரசித்துக் கொண்டிருந்தனர். ஒரு சேவல் 'கொக்க ரக்கோ....' எனக் கூவியது....

இயலாமையின் வெளிப்பாடோ!

சிறுவனின் குறும்பு .... துடுக்குத்தனமாக மாறியது.... பக்கத்திலிருந்த கற்களைப் பொறுக்கி ஒவ்வொரு சேவலுக்கும் எறிந்தான். சில கற்கள் சேவல்களின் முதுகில் பட்டன .... சில குறி தவறின ....

அப்போது அவனின் அண்ணன்,

"குறி பார்த்து எறிடா..." என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பக்தர்கள்' ரசிப்பதைத் தொடர்ந்தனர். வதையும் தொடர்ந்தது....

கால்கள் கட்டியிருப்பதால், நேர்த்திச் சேவல்கள் ஓட முடியாமல் கல் பட்ட வலியினால் சரிந்து, புரண்டு கேவத் தொடங்கின.

"தம்பீ.... எறியாதே பாவம் ...."

எனது குரல் கேட்டுத் திரும்பிய பையன் ஒரு கல்லால் எனக்கும் எறிந்தான்.

"தம்பீ .... ஐயாவுக்கு எறியாதே ..." அவனின் தந்தை அதட்டினார்...

சிறுவன் சேவல்கள் தன்னை எதிர்க்காது என்று தெரிந்து ..... மெல்ல அமர்ந்து சேவல்களின் தலைப் பூக்களைச் சீண்டி னான்.

"செபிப்போமாக .... இறைவா ...."

ஆயரவர்களின் இறுதிச் செபம் ஆரம்பமாகியது.

சரியான தருணத் தைப் பார்த்திருந்த ஒரு சேவல் தனது கொண்டையைச் சீண்டிய சிறுவனின் விரலில் தனது சொண்டால் ஆக்ரோஷ மாகப் பாய்ந்து... சற்றுப் பலமாகவே கொத்தி விட்டது....

"ஆ... ஆ... அம்மா .... அப்பா ....."

சிறுவன் அலறினான். கீழே விழுந்து துடித்தான். விரலிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது ... அவனது தந்தை பையனைத் தூக்க ஓடினார் ...

- அன்று தேர்தல் முடிவும் வெளியானது.

அதிகாலையிலேயே முழு முடிவும் வரத் தொடங்கியிருந்தது. மௌனமாக .... சந்தர்ப் பம் பார்த்துக் காத்தி ருந்த வதைபட்ட .... வதைக் கப்பட்ட மக்கள் பிரதேச, மத பேத மின்றி 'எழுந்து நின்று' "வாக்களித் திருந்தனர்.

நான்கரை இலட்சம் வாக்குகளினால் 'ஐயா' தோற்றுப் போனார். சரியான முறையில் மக்கள் தங்கள் பதிலை ..... பலத்தைக் காட்டிவிட்டனர். யானை படுகுழியில் விழும்போது தவளை யும் தன் பின்னங் காலால் யானையைத் தள்ளி விடுமாம். ஆமாம் .... அது சிறப்பாகவே நடந்தேறியது....

- யாவும் கற்பனை -

## நோயாளிகளுக்கு ஆறுதல் கூறும் பாப்பரசர்

பாப்பரசர் பிரான்சிஸ் நோயாளிகளுடன் தொலைபேசியில் அழைத்துப் பேசுவதை வழக்கமாகக் கொண்டி ருக்கிறார். அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேற்றுகிறார். இப்படித்தான் பிராங்கோ ரபுபி என்பவரை இருமுறை பாப்பரசர் தொலைபேசியில் அழைத்துப் பேச முயற்சித்தார்.

"ஹலோ, நான் போப் பிரான்சிஸ்" என்று சொன்னவுடன் யாரோ குறும்புச் செயலில் ஈடுபடுகிறார்கள் என நினைத்து பிராங்கோ ரபுபி தொலைபேசி அழைப்பைத் துண்டித்துவிட்டார். ஆனால், பாப்பரசர் மூன்றாவது முறையும் அழைத்தபோதுதான் பிராங்கோ தனது தவறை உணர்ந்தார். அழைத்திருப்பது பாப்பரசர்தான் என உறுதிசெய்து பேச்சற்று திகைத்துப் போனார்.

அதுமட்டுமல்ல அவரையும், மனைவியையும் தனது வாராந்த சந்திப்பின்போது பாப்பரசர் வரவழைத்து அரவணைத்து ஆறுதல் கூறியதுடன் தொலை பேசியில் தொடர்புகொண்டு பேசியது நான்தான் எனச் சிரித்துக்கொண்டே கூறினார்.



## உலகின் முதல் புத்தகம்



உலகின் முதல் புத்தகம் 'கெலிக்' என்ற கெலடிக் இன மக்களின் மொழியில் தயாரானதுதான். 1567ம் ஆண்டு வெளியிடப்பட்ட இப்புத்தகத்தில் முற்றிலும் இறைவணக்கப் பாடல்களே நிறைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'Allium Sativum'* என்பது பொதுவாக வெள்ளைப்பூடைக் குறிக்கிறது. *Alium* எனும் இனம் வெங்காய இனத்தைச் சார்ந்தது. அதனால், தமிழில் இதற்கு வெள்ளை வெங்காயம் எனப் பெயரும் குறித்தனர். பொருளும் குறித்தனர் சொல் வல்லாளர்.

இவ் வெள்ளைப்பூடு சலட் *(Shallot)*, லீக்ஸ் *(Leeks)* எனும் இனத்தைச் சேர்ந்தது. 7000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இது மனித உபயோகத்திற்காகப் பெரிதும் பயன்பட்டது.

இது ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் பயிர் செய்யப்பட்டும், காடுகளில் புல் பூண்டைப் போன்று தானாக விளைவதாகவும் அறிகின்றோம். பண்டைய எகிப்தியர்கள் இதன் பிரயோசனத்தை நன்கு அறிந்திருந்தனர். இதனால் பண்டைய எகிப்தியக் காடுகளிலும், எகிப்தியர் மத்தியிலும், மத்திய தரைக்கடல் பிரதேச மக்களிடமும் மூலிகையாக மட்டுமன்றி போசாக்குள்ள உணவு வகையாகவும் *(Staple Food)* பயன்பட்டது. எனவே, தோன்றிய காலத்தில் இருந்தே உணவு விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டு மனிதன் உணவைத் தனதாக்கிக் கொண்டான்.

திருவிவிலியம் தன்னுடைய படைப்புக் கதையைத் தாம் படைத்த அனைத்தையும், புல், பூண்டுகளும் அழகாக மட்டுமன்று, நன்றாகவிருந்தது என்பதையும் கடவுளின் வாயிலாகக் கவித்துவ நயத்தோடு எடுத்துக்கூறுவது பெரியதொரு சமூக விஞ்ஞானக் கருத்தே!

ஐக்கிய அமெரிக்கக் குடியரசு நாடுகளில் 52 நாடுகளில் அலெஸ்கா மாநிலத்தைத் தவிர ஏனைய 51 நாடுகளிலும் வெள்ளைப்பூடு பயிரிடப் படுகின்றது.

**வெள்ளைப்பூடு எவ்வாறு அறுவடை செய்யப் படுகிறது?**

எல்லா விதைகளும் பொருத்தமான நிலத்தில் பயிரிடப்பட வேண்டும்.



# வெள்ளைப்பூடு
## திடுக்கிடும் தகவல்கள்

- அருட்திரு: கலாநிதி: S.A.I. மத்தியூ -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், வெள்ளைப்பூண்டின் விளைச்சல் வெங்காயத்தைப் போன்று பூமியின் மேற்பரப்பில் அன்றி மூடிய மண்ணுக்குள் விளைவதில்லை. இனம் ஒன்றாக இருந்தாலும் அதன் விளைச்சல் பூமியின் மேற்பரப்பிலேயே நடைபெறுகிறது. சுமார் 1 அல்லது ஒன்றரை மீற்றர் உயரத்தில் வெள்ளைப்பூண்டு நிலத்திற்கு மேலாக எழுந்த கம்புகளிலே சோளங் குலையைப் போன்று விளைகிறது. அதனால், வெள்ளைப் பூண்டில் எந்தவொரு மணல் மணியையும், எவ்வித அழுக்கையும் காணமுடியாது.

இக்கட்டுரை வாசகரின் சிந்தனையைத் தூண்டும். அதனால், வரைபடங்கள் மூன்றை இக்கட்டுரையில் தருகிறோம். 1வது படம் வெள்ளைப் பூண்டு பூத்திருக்கும் காட்சியையும் 2வது படம் வாழைக்காய்களைப் போன்று சீப்பாக இருப்பதையும் 3வது படம் வெள்ளைப் பூண்டு சேமிக்கப்படுவதையும் காட்டுகிறது.



படம் – 01



படம் – 02



படம் – 03

வெள்ளைப்பூடு நபியாவிலும், சிசிலி, இத்தாலி, வெனிஸ், பிரான்ஸ், ஸ்பானியா, இந்தியா ஆகிய நாடுகளிலும், சீனா, கொரியா, இந்தியா ஆகிய நாடுகளிலும் விளைவிக்கப்படுகிறது.

சுவைகளின் பயன் என்ன என்பது நம்மில் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை....
இனிப்பு – உடலில் தசையை அதிகமாக வளர்க்கும்: கசப்பு – கிருமிகளை அழிக்கும்: புளிப்பு – ரத்தக் குழாய்களிலுள்ள அழுக்கை நீக்கும்: உறைப்பு – உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்: உவர்ப்பு – ஏதேனும் காயம் பட்டால் ரத்தத்தை உறையச் செய்யும்.

**சுவைகளின் பயன்**

## வெள்ளைப் பூண்டின் விளைச்சல் விகிதாசாரம் :

உலகளாவிய ரீதியில் உற்பத்தி செய்யப்படும் வெள்ளைப்பூடு உலகச் சந்தையில் சீனாவிலேயே அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றது. சீனா சுமார் 20 மில்லியன் தொன்கள் உற்பத்தி செய்கிறது. இது 40 மில்லியன் றாத்தல்களாகும். வருடந்தோறும் இவ்வுற்பத்தி கூடிக்கொண்டிருக்கிறது.

சீனாவின் உற்பத்தி உலகச் சந்தையில் 81% மாகும். இந்தியா 4.6%, தென்கொரியா 1.4%, எகிப்து 1.2%, ஐக்கிய அமெரிக்கா, அலெஸ்கா தவிர்த்த நாடுகள் முழுவதிலும் 0.8%, ஏனைய சுமார் 11% வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளைப்பூண்டு உற்பத்தியில் தலைசிறந்த நகரமாகக் கலிபோர்னியா விளங்குகின்றது.

கனடாவிற்கு அங்கு வந்த குடியேற்ற வாசிகளால் வெள்ளைப்பூண்டுச் செய்கை அறிமுகப் படுத்தப்பட்டது.

## வெள்ளைப்பூண்டின் பயன்பாடுகள் :

உலகில் வெள்ளைப்பூண்டின் வித்தியாசமான வாசனைக்காக, உணவைப் பண்படுத்தும் தன்மைக்காகப் பயன்படுகிறது. வெள்ளைப்பூடுத் தாவரத்தின் பூண்டுகளே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. வெள்ளைப்பூடு தயாரித்த உணவாகப் பயன்படுகிறது. அத்துடன் அதன் மூளி மருந்தாகவும் உள்ளது.

இலங்கையில் வெள்ளைப்பூடுப் பயிர்ச் செய்கை, ஆய்வுகளுக்குப் பெரிதும் பயன்படுத்தப் படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாளின் புகழ் ... 04

## உலகெங்கும்

**சிச்கெம் மாதா**
**சிச்கெம், இஸ்ரேல்**



இஸ்ரேலின் மவுண்ட் காரிஸிம் என்ற இடத்திற்கு கீழே அமைந்திருந்த ஆலயம்

மாற்றப்பட்டு லூவைன் பிராந்தியத்தைச் சேர்ந்த பிரபாண்ட் என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு சமயங்களில் அங்கு வாழ்ந்துவந்த கிறிஸ்தவர்கள், சமாரியர்களின் கைகளில் மிகப் பெரிய துன்பங்களை அனுபவித்தனர். கி.பி.474ம் ஆண்டின் பேரரசர் மவுண்ட் காரிஸிம் பகுதியைக் கிறிஸ்தவர்களுக்கு வழங்க, கன்னிமரியாளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு ஆலயத்தை அவர்கள் அங்கு கட்டி எழுப்பினர். சிச்கெம் அன்னை அல்லது "மான்டியாகு" அன்னை என இன்றைக்கு மிகப் பரவலாக அழைக்கப்படுகிற அந்தப் பழங்காலப் பாரம்பரியம் கொண்ட அன்னையின் சுரூபமானது ஆரம்ப காலத்திலிருந்து பெல்ஜியத்தில் வணக்கத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

## எண்ணிப்பார்க்கையில்....

வாழ்க்கையில் பலர்
சரியான நேரத்தில் சரியான முடிவுகளை
எடுக்காததால் தவறுகள் செய்கின்றனர்.
இன்னும் பலர்
தேவையான நேரத்தில் முடிவினை
எடுக்காததால் தவறிப் போகின்றனர்!
முடிவு எடுப்பதென்பது வாழ்வில்
தவிர்க்க முடியாத அம்சம்!
முடிவெடுப்பதென்பது வாழ்வில்
மாற்ற முடியாத நியதி!



முடிவுகளில் தவறுகள் நேரலாம்
அதனால் பல இன்னல்கள் ஏற்படலாம்
இருந்தும் அனுபவங்களை வைத்து
ஆழமாக எண்ணிப் பார்க்கையில்,
தவறான முடிவால் வரக்கூடிய
இடரைக் காட்டிலும்
முடிவெடுக்காமல் இருப்பதே
பாரதூரமான விளைவைத் தரும்
என்பது மனதுக்குப் புலனாகும்!

– ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கத் திருமறை

# மாணவர் பக்கம்

## க.பொ.த. (உயர்தரம்)

-நில்மினி கஜேந்திரன்-

**மன்னார் மறைசாட்சிகள் :**

அக்காலப் பகுதியிலே மன்னார் யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாகவே இருந்தது. மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியதைக் கேள்வியுற்ற சங்கிலி மன்னன் கோபங்கொண்டு சீறியெழுந்தான். மனிதப் பண்பற்ற கொடியவனான இவன் சர்வாதிகாரப் போக்குடையவன். முடிக்குரிய தனது மூத்த சகோதரனைச் சிறையில் அடைத்துவிட்டு, நாட்டுப் பிரஜைகளை அடிமைப்படுத்தித் தன் படைப் பலத்தினால் கொடுங்கோலாட்சி செய்துவந்தான்.

தனக்கெதிராகக் கிளர்ச்சி செய்தவர்களைஅழித்துத் தனது ஆட்சியைப் பாதுகாத்து வந்தான். மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியதைக் கேள்விப்பட்ட இந்துக் குருக்கள் கோட்டே அரசு போன்று யாழ்ப்பாண அரசும் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்படுமென்றும், இந்து ஆலயங்களும் அழிக்கப்படும் என்றும் பிரச்சாரம் செய்தனர். இது மட்டுமல்லாமல் மன்னார்க் கிறிஸ்தவர்களும் யாழ்ப்பாண அரசை விடுத்து போர்த்துக்கேய அரசை ஆதரிப்பார்களெனத் தவறான கருத்துக்களையும் பரப்பினர்.

இதனால், சங்கிலி மன்னன் 5000 படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு தானே தலைமை தாங்கி மன்னாருக்குச் சென்றான். புதிதாக இணைந்த கிறிஸ்தவர்களைத் திரும்பவும் இந்துக்களாய் மாறும்படிக் கட்டளையிட்டான். அவ்வாறு மாறத் தவறுவோருக்கு தண்டனை வழங்கப்படும் எனவும் எச்சரித்தான். இருப்பினும், மன்னார் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தில் உறுதியாய் இருந்தனர். இதனால், சங்கிலி மன்னன் கோபம் கொண்டு யுவான் டி லிஸானோ என்பவருடன் 700 பேர் வரை 1544ல் மார்கழி மாதத்தில் தோட்டவெளி எனும் இடத்தில் மிகக் கொடூரமாய்க் கொலை செய்தான். இவர்களையே நாம் "மன்னார் மறைசாட்சிகள்" என அழைக்கிறோம். அவன் சிறு பிள்ளைகளைத் தானும் விட்டு வைக்கவில்லை. எஞ்சிய சிலர் ஓடி ஒளித்துக்கொண்டனர். கிறிஸ்தவர்களின் இரத்தம் இங்கு ஆறாய் ஓடியது. மறைசாட்சிகளின் பூமியாக மாறிய மன்னார் தீவு "புனித குருசுத் தீவு" என அழைக்கப்பட்டது. சங்கிலியன் 'இத்தோடு தனது அரசில் கிறிஸ்தவம் மறைந்துவிடும்' என எண்ணினான். ஆனால், மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறியது. இதனை அடுத்து ஏறத்தாழ, 7000 பேரும், தர்மபாலனும் கிறிஸ்தவத்தைத் தழுவியதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். மன்னார்க் கிறிஸ்தவர்களின் மறைசாட்சி மரணத்தை கேள்வியுற்ற புனித பிரான்சிஸ்கு சவேரியார் மிகவும் கவலைப்பட்டு வருந்தினார். மன்னன் சங்கிலியனைத் தண்டிக்கவும், கிறிஸ்தவர்களைப் பாதுகாக்கவும், மக்களின் மதச் சுதந்திரத்தை மறுக்கமுடியாது என்பதைச் சகல அரசர்களுக்கும் உணர்த்தவும், யாழ்ப்பாணத்தின் மீது படை எடுக்கும்படி போர்த்துக்கேய அதிகாரிகளைத் தூண்டினார். இதற்கிடையில் அவர் 1545ல் மன்னார் சென்று வேதசாட்சிகளின் பரிசுத்த பூமியை முத்திசெய்தார்.

அக்காலத்தில் மன்னாரில் ஒரு பெரிய கொள்ளை நோய் பரவிக் கொண்டிருந்தது. இதனால் பலர் நாள்தோறும் நூற்றுக் கணக்கில் இறந்துகொண்டிருந்தனர். புனித சவேரியார் அக்கொள்ளை நோயைத் தமது செபத்தினால் நிறுத்தினார். இதனைக் கேள்வியுற்ற பலர் விசுவாசம் கொண்டு மனந்திரும்பிக் கிறிஸ்தவர்களாயினர். மாறிய கிறிஸ்தவர்களைப் பிரான்சிஸ்கன் சபைக் குருக்களின் பராமரிப்பில் விட்டு விட்டுப் புனித சவேரியார் இந்தியா சென்றார். வழியிலே அவர் நெடுந்தீவைத் தரிசித்து, இறந்த இளைஞர் ஒருவனை .....

தொடர் 20ம் பக். ...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருட் தந்தை: கிறிஸ்டியன் நோயல் இமானுவல் அடிகளாரைத் திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த 03.06.2015 அன்று புதன்கிழமை நியமனம் செய்துள்ளார். 1983ம் வருடத்திலிருந்து திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்ற அதிவந்தனைக்குரிய ஆயர்: ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் 29 வருடங்களின் பின், தனியாக இயங்கத் தொடங்கிய திருகோணமலை-மறைமாவட்டத்தின் ஆயராக 3 வருடங்கள் பணி புரிந்துள்ளார். இவர் 78வது வயதினில் தம் பணியிலிருந்து ஓய்வு பெறுவதைத் திருத்தந்தை ஏற்றுக்கொண்டு புதிய ஆயரை நியமித்துள்ளார்.

அருட்தந்தை: கிறிஸ்டியன் நோயல் இமானுவல் திருகோணமலையில் 1960ம் வருடம் மார்கழித் திங்கள் 25ம் நன்னாளில், அதாவது கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவில் பிறந்தார். 1986ம் வருடம் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மட்டக்களப்பு - புளியந்தீவு இணைப் பேராலய உதவிப் பங்குத் தந்தையாகவும், இருதயபுரம், அக்கரைப்பற்று ஆயித்தியமலைப் பங்குகளில் பங்குத் தந்தையாகவும், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர் தந்தையாகவும் பணியில் அரும்பாடுபட்டு உழைத்தவர். இவரது பணிக்காலத்தில் மறைக்கல்வி நடுநிலையச் செயற்பாடாகக் கட்டமைப்புக்கு உட்படுத்தப்பட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம், மறையாசிரியர் ஒன்றியம் ஆகிய அமைப்புகள் முதன் முதல் உருவாக்கப்பட்டன. அன்பியங்களும் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

1999ம் வருடம் உரோம் நகர் சென்று இரு வருடங்கள் உர்பானியா பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நன்னெறியில் உயர்கல்வியைப் பெற்று நாடு திரும்பிய இவர், 2001ம் வருடம் முதல் கண்டி - அம்பிட்டியா தேசிய குருமடத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். 2011ம் வருடம் திருகோணமலையின் குருமுதல்வராகவும், 2012ம் வருடம் தொடக்கம் புதிதாக உருவான திருகோணமலை மறை மாவட்டத்தின் பொருளாளராகவும் பணியாற்றி வந்தவர்.

கல்வியறிவும், செயற்றிறனும், அனுபவ அறிவும் கொண்ட இவரது புன்னகை மாறா வதனம் சிறப்புக்குரியது. அனைவருக்கும் நல்லதொரு நண்பனாகத் திகழும் சுபாவமுடைய புதிய ஆயரை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சார்பாகவும், சமூகத் தொடர்பு நிலையத்தின் சார்பாகவும் உளமார்ந்த அன்போடு வாழ்த்தும் அதேவேளை, பரிசுத்த ஆவியாரின் வல்லமை அவரில் எப்போதும் தங்கி நின்று அவரை ஆயத்துவப் பணிப் பாதையில் தளராது வழிநடத்தவும் வேண்டுமென்று இறைவனிடம் இறைஞ்சி நிற்கின்றோம். அவரது ஆயத்துவப் பணி ஓங்க எமது செபம் கலந்த வேண்டுதல்கள் என்றுமே உரித்தாகட்டும்.



# புதிய ஆயரை வாழ்த்துகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் அரசியல்

## இன்றும் ஒரு தேர்தல் திருவிழா

அரசியல் ஒரு சாக்கடை என்பது ஒரு அப்பட்டமான உண்மை! இதைச் சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நம் நாட்டுஅரசியல் நிலைமைகள் நிரூபித்துக் கொண்டேயிருக்கின்றன. இதனால்தான் நல்ல அறிவு கொண்டவர்கள், சமூகத்திற்காக உழைக்க வேண்டும் என்று உண்மையான ஆர்வம் கொண்டவர்கள் இதில் தீவிர ஈடுபாடு காட்டுவதில்லை. சேற்றில் இறங்கித் தம்மீது சேறள்ளிப் பூசிக் கொள்வதை நியாய புத்தியுள்ள யார்தான் விரும்புவார்கள்?

இவ்வாண்டின் தொடக்கத்தில் ஜனாதிபதி தேர்தலில் ஊழலுக்கெதிரான போராட்டம் என்று தொடங்கியதோ தேரோட்டம் கோலாகலமாக இருந்ததே தவிர, எந்தவித அருளையும் தராமல் உப்புச் சப்பின்றி ஏமாற்றத்தில் முடிந்திருக்கிறது. 'குற்றவாளிகள்' என்று அடையாளப்படுத்தப்பட்டோருக்கு எதிராக விசாரணை கள் என்ற கண் துடைப்புக்கள் தவிர உருப்படியான எந்த நடவடிக்கைகளுமே எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை! கடைசியாக அந்தக் 'குற்றவாளிகள்' மீண்டும் தேர்தல் களத்தில் ஈடுபட ஒருவகையில் போராடி வெற்றி கண்டுள்ளார்கள் என்றே கூற வேண்டும். தேர்தலின் போதும் மக்கள் அவர்கள் குற்றமற்றவர்கள்தான் என்று ஏற்றுக்கொள்ள நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன! அவர்களுக்கெதிராகத்தான் ஒன்றுமே நடக்கவில்லையே!!

இந்தக் குற்றவாளிகள் ஆட்சி ஏறுவது ஒருவகையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நன்மையாகக் கூட அமையும் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு! மேற்குலக நாடுகளின் 'ஜனநாயக விழுமியங்கள்' இலங்கையில் என்ன பாடுபடுகின்றன என்பதை அவைகள் புரிந்துகொள்ளும்.

கடந்து விட்ட ஒரு சில மாதங்களுக்குள் தமிழர்களுக்கெதிரான குறிப்பாக, வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் அரசியற் தீர்வுக்கான முயற்சிகளை முறியடிப்பதிலும், போர்க் குற்றவாளிகளுக்கெதிரான சர்வதேச விசாரணை தேவை என்கின்ற அவர்களது கடும் எத்தனங்களை மழுங்கடிக்கவும், இடம்பெயர் தமிழர்களுக்கான மகாநாடு என்கின்ற போர்வையில் அவர்களைக் கூறுபோடுவதிலும் இலங்கை அரசு கணிசமான வெற்றி கண்டிருக்கின்றது. இவை எல்லாவற்றிலும் மோசமானதாகக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளை அபிவிருத்திக்கான நிதி என்கின்ற போர்வையில் ஜனாதிபதிக்கே தெரியாத வகையில் பணத்திற்காக வாங்கியிருப்பது வடமாகாண முதலமைச்சரின் மூலம் வெளிவந்து அதிர்ச்சியளித்திருக்

— பாழுர்வேந்தன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. இவை எல்லாம் மேற்குலக நாடுகளின் ஆதரவு கொண்டுள்ள பச்சைக் கட்சியின் கைங்கரியம். பேச்சுவார்த்தை என்ற சூழ்ச்சி வலையில் சிக்கவைத்துகொள்கையில் திடங் கொண்டிருந்த புலிகள் அமைப்பைச் சிதறப் பண்ணியதும், எப்போதெல்லாம் தமிழினப் பாதிப்புகள் சத்தமில்லாமல் அரங்கேறியதோ அப்போதெல்லாம் மூல காரணமாக இருந்தது பச்சை ஆட்சிதான்!

நிரந்தரமான ஒரு ஆட்சி இல்லாத நேரத்தில் குறுகிய கால இடைவெளியில் இத்தனையையும் அந்தக் கட்சியின் தலைமைகளால் செய்து முடிக்கக் கூடுமானால் அதன் முழு அளவிலான ஆட்சியில் என்ன நடக்கும் என்று சிந்தித்துப் பார்க்கவே முடியவில்லை. தற்போதே தேர்தல் ஆசையில் பச்சையோடு இணைந்து கொள்ள நம்மவர்களே போராடுவதாகவும் கேள்வி. கடந்த காலத்தில் தேர்தலில் இறங்கிப் பெற்றுக் கொண்ட பணத்தில் சுகபோகம் கண்டவர்கள் தம் மத்தியில் இருப்பதைக் கண்ட அவர்களுக்கும் சுக வாழ்வு வாழும் ஆசை வந்துவிட்டது. தட்டிக் கேட்க ஆளில்லா நிலையல்லவா?

பணத்திற்கு அடிமையான தமிழ்த் தலைமைத்துவத்தை நம்பி ஆற்றில் இறங்க முடியாது. புதியவர்களைக் களம் இறக்க ருசிகண்ட பூனைகள் முன்வரப் போவதில்லை. களம் இறங்க அவர்களுக்கெதிராக முன்னாள் போராளிகள் முனைவது எந்தளவு சாதகமாக அமையுமோ தெரியவில்லை. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடி பாடு கொண்டாட்டமாகவே இருக்கும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை! தீர்க்கமான முடிவையெடுப்பது நம் கையில்தான்!!

யாரை நம்பினாலும் தமிழன் வாழ்வு விடிவு காண்பது கடினமே. நூறு நாள் ஆட்சியின் பலன் என்ன கண்டோம்? சிறைவாழ்வில் மாற்றமா? குடியேறுவதில்தான் முன்னேற்றமா? எனினும் காலமும் கடவுளும் கைவிடுவதில்லை. எதிர்வரும் சிக்கல் நிறைந்த நாட்களின் முடிவில் இது தெரிய வரும். ★

## மாணவர் பக்கம் ...

... உயிர்ப்பித்ததாயும் வரலாறு கூறுகிறது.

போர்த்துக்கேயர் சங்கிலி மன்னனுடன் போர் தொடுக்க ஆயத்தமாகினர். இதைக் கேள்வியுற்ற அரசன் அவர்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்ய ஆயத்தமாகினான். இதற்கிடையில் பர்மாவிலிருந்து சரக்குகளுடன் வந்த கப்பல் புயலில் சிக்கி நெடுந்தீவில் கரை ஒதுங்கியது. சங்கிலி மன்னன் அதிலிருந்த திரவியங்களை அபகரித்துக்கொண்டான். இதனை மீளப் பெறும்வரை போர்த்துக்கேயர் அரசனுக்கெதிரான படையெடுப்பினைத் தள்ளிப்போட்டனர். அவனின் சமாதான ஒப்பந்தக் கோரிக்கைக்கு இசைந்தனர். இதன் நிமித்தம் அரசன் அவர்களின் ஆதிக்கத்தையும் ஆதரித்து இனிக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதில்லை என உறுதியளித்தான். இதனால், கிறிஸ்தவர்கள் சற்றுச் சுதந்திரமடைந்தனர். கிறிஸ்தவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே சென்றது. 1621ல் யாழ்ப்பாண இராட்சியம் முழுமையாகப் போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டினுள் வந்தது. 1626ல் 41,260 கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாண இராட்சியத்தில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு கிறிஸ்தவ மதமானது அதி தீவிரமாய் யாழ்ப்பாண இராட்சியத்திலும் பரவிக் காணப்பட்டது.

வாழ்வு வந்தது என்பர் மானிடர்
வந்த வாழ்வு எப்படி வந்தது
வாழும் நெறி நெஞ்சறிய நல்லது எனில்
வந்த வாழ்வு எப்போதும் தங்குமே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு அவைச் செய்திகள்

பெண்களின் மாண்பு மதித்துப் போற்றப்படுவதே வளர்ச்சியடைந்த ஒரு சமுதாயம் என்பதை நிர்ணயிக்கும் அளவுகோல் என்று ஆர்ஜென்டீனா ஆயர்கள் கூறியுள்ளனர்.

■

தம் மக்களையே காப்பாற்ற இயலாத அரசுகள், நாட்டை ஆள்வதற்கான சட்டரீதியான உரிமைகளை இழக்கின்றன என அரசைக் குறை கூறியுள்ளனர் கென்ய ஆயர்கள்.

■

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தின் பூர்வ குடி மக்கள் வாழும் பகுதிகளில் நடைபெறும் சுரங்க வேலைகளும், அதோடு தொடர்புடைய தொழிற்சாலைகளும் மக்கள் தொடர்ந்து இடம்பெயர்வதற்கும், அவர்களின் வறுமைக்கும் காரணமாக ஆகியுள்ளன என்று அம்மாநிலத்தின் திருஅவைத் தலைவர்கள் கூறினர்.

■


நமது நற்செய்திப் பணி, மதமாற்ற நோக்கத்தைக் கொண்டதல்ல. ஆனால், நம்மிடமிருப்பதைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதே என்று கர்தினால் ஆஸ்கார் ரொட்ரிகெஸ் மாராதியாகா கூறினார்.

■

சுயநலம், பேராசை என்ற அடிப்படையில் உருவாக்கப்படும் பொருளாதாரம், சமுதாயச் சமன்பாட்டைச் சீர்குலைத்து, நாம் வளர்க்க விரும்பும் பசுமைப் பொருளாதாரத்தையும் அழிக்கிறது என்கிறார் நீதி மற்றும் அமைதிக்கான வத்திக்கான் தலைவர் கர்தினால் பீட்டர் டர்க்சன்.

■

அமெரிக்காவினுள் தகுந்த அனுமதியின்றி நுழைவோரை குறிப்பாக, நலிந்தோரை, குற்றவாளிகளைப்போல நடத்தும் போக்கினை அரசு கைவிட வேண்டும் என்று அமெரிக்க ஆயர்கள் பேரவை கூறியுள்ளது.



## திருத்தந்தையின் திருமடலுக்கு ஐ. நா. பாராட்டு

திருத்தந்தை பிரான்சிஸ் எழுதியுள்ள "இறைவா உமக்கே புகழ்" என்ற சுற்றுச் சூழல் பற்றிய சுற்று நிருபம், மனித குலம் எதிர்நோக்கும் தட்ப வெப்ப நிலை மாற்றம் குறித்த முக்கிய சவால்களுக்குத் தீர்வுகாண, புதிய கலந்துரையாடல்கள் தேவைப்படுவது பற்றிய கருத்துக்களைக் கொண்டிருப்பது குறித்துத் தன் பாராட்டுக்களை வெளியிட்டுள்ளார் ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூன்.

பெரும்பாலும் மனித நடவடிக்கைகளின் விளைவாக இடம்பெறும் உலக வெப்பநிலை அதிகரிப்புக் குறித்துத் திருத்தந்தை தன் திருமடலில் குறிப்பிட்டுள்ளதை எடுத்தியம்பியுள்ள ஐ.நா. பொதுச்செயலர், எல்லா அரசுகளும் தங்கள் தேசிய நலனையும் தாண்டி, உலக பொது நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.


தட்பவெப்ப நிலை மாற்றம் என்பது ஓர் ஒழுக்கரீதி சார்ந்த பிரச்சினையாக உருவெடுத்துள்ளதால், அனைவரின் ஒன்றிணைந்த அதேவேளை அவசர நடவடிக்கை தேவைப்படுகிறது என்பதில் தானும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் ஒத்த கருத்துடையவர்களாக உள்ளோம் எனவும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது கூறினார் ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பு**னித பவுஸ் தினா

# புனித பவுஸ்தினாவின்




ஆகஸ்ட் மாதம் 25ந் திகதி 1905ம் ஆண்டு, போலந்து தேசத்தில் குளோவியக் என்ற கிராமத்தில் ஸ்ரனிஸ்லா கோவால்ஸ்கி - மரியன்னா என்ற தம்பதியினர் பெற்றெடுத்த 10 குழந்தைகளில் மூன்றாவது பிள்ளையாக அவதரித்தார். எளிமையான, ஆனால் பக்திமிக்க குடும்பத்தில் பிறந்ததால் சிறுவயதிலிருந்தே செபிப்பதில் ஆர்வமும், வீட்டு வேலைகள் செய்வதில் சுறுசுறுப்பும், கீழ்ப்படிவும், ஏழைகள் மட்டில் கூருணர்வுத் திறனும் கொண்டு விளங்கினார். 09வது வயதில் முதல் நன்மை பெற்று தன் உள்ளத்தில் எழுந்தருளிய தெய்வீக விருந்தாளியின் பிரசன்னத்தில் வாழக் கற்றுக் கொண்டார். குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக மூன்று ஆண்டு கால ஆரம்பக் கல்வியை கற்றபின், செல்வந்தக் குடும்பங்க ளின் வீட்டில் வேலைகள் செய்தார். ஆகஸ்ட் மாதம் 01ம் திகதி 1925ம் ஆண்டில் தனது 20வது வயதில் கிராக்கோவ் எனுமிடத்திலிருந்த மரியாவின் இரக்கக் கன்னியர் சபையில் இணைந்துகொண்டார். திருமுழுக்கின்போது கொடுக்கப்பட்ட பெயர் எலேனா, துறவற சபையில் இணைந்தபோது பெற்றுக்கொண்ட பெயர் அருட் சகோதரி: மேரி பவுஸ்தினா என்பதாகும். துறவற வாழ்வில் 13 ஆண்டுகள் வாழ்ந்தபோது, பல அலுவல்களிலும் ஆர்வமுடன் ஈடுபட்டார். சிறு வயதிலிருந்தே தானும் ஒரு பெரிய புனிதராக வேண்டும் என்ற அவாவினாலும், அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் படிப்படியாக முன்னேறத் தொடங்கி, பாவிகளின் மீட்புக்காக கிறிஸ்துவினுடைய பாடுகளில் தானும் இணைந்து தன் துன்பங்களையும் ஒப்புக்கொடுத்துத் துறவற வாழ்வை அர்ப்பணத்துடனும், பிரமாணிக்கத்துடனும் வாழ்ந்தார்.

## மட்டு. ஆயரின் மறையுரையிலிருந்து ....





அருட்சகோதரி: பவுஸ்தினா காச நோயினால் (TB) பீடிக்கப்பட்டு தனது 33வது வயதில் அக்டோபர் மாதம் 5ம் திகதி 1938ம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார். 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் திகதி உயிர்ப்பின் முதல் ஞாயிறன்று திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரினால் அருட்சகோதரி: பவுஸ்தினா அருளாளராக பிரகடனப்படுத்தப்பட்டார். 2000ஆம் ஆண்டு ஏப்ரல் 30ந் திகதி உயிர்ப்பின் 1ஆம் ஞாயிறன்று திருத் தந்தை 02ம் அருள் சின்னப்பர் அருளாளர் பவுஸ்தினாவைப் புனிதராக ஏற்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவார்த்தையினை புனித பவுஸ்தினா ஆழ்ந்து, சிந்தித்து, இறை இரக்க மறையுண்மையை, ஆழ்ந்து தியானித்ததன் மூலம் இறைவன் மேல் குழந்தை போன்ற நம்பிக்கையையும், அயலார் மட்டில் இரக்கத்தையும் மலர்ச்சியுறச் செய்தார்.

அவர் கூறுகின்றார்: "இயேசுவே, ஒவ்வொரு புனிதரும் உம்மிடம் விளங்கிய ஒவ்வொரு புண்ணியத்தைப் பிரதிபலிக்கின்றார்கள். நான் உமது இரக்கம் நிறைந்த இதயத்தைப் பிரதிபலிக்க விரும்புகிறேன். அதனை மகிமைப்படுத்த விரும்புகிறேன். ஓ! இயேசுவே! உமது இரக்கம் எனது இதயத்திலும், ஆன்மாவிலும் முத்திரை போன்று பதிக்கப்பெற்று, இக்காலத்திலும், எதிர்காலத்திலும் அதுவே எனது அடையாளச் சின்னமாக இருப்பதாக". (கைக்குறிப்பு - 1242)

புனித பவுஸ்தினா திருச்சபையின் பிரமாணிக்கமுள்ள மகளாக விளங்கினார். திருச்சபையில் தன் பணியை உணர்ந்தவராக, தொலைந்துபோன ஆன்மாக்களை மீட்கும் பணியில் இறை இரக்கத்தோடு ஒத்துழைத்தார்.

அவரது துறவற வாழ்வு விண்ணகக் கொடைகளினால் நிரம்பியிருந்தது. அவையாவன, திருவெளிப்பாடுகள், காட்சிகள், இறையருளால் கிடைக்கப்பெற்ற மறைவான தழும்புகள், கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்றல், ஒரே நேரத்தில் ஈரிடங்களில் இருக்கும் கொடை, மனித ஆன்மாக்களை அறிதல், இறைவாக்கு வரம், ஆன்மீகச் சார்பான மண ஒப்பந்தம், திருமணம் போன்றவை கடவுளுடன் உயிருள்ள உறவு, பேறுபெற்ற தாய் மரியாள், புனிதர்கள், உத்தரிப்பு தலத்தின் ஆன்மாக்கள், விண்ணுலகு சார்ந்த அனைத்தும் இவ்வுலகில் அவர் புலன்களால் உணர்ந்த அனைத்திற்கும் சமமாக இருந்தது. வழமைக்கு மாறாக அவர் பெற்றிருந்த அனைத்துப் பெறுமதிமிக்க கொடைகள் யாவும் தன் வாழ்வின் புனிதத்தை இணைந்து உருவாக்க முடியாது என்பதை அறிந்திருந்தார்.

ஆண்டவர் இயேசு அருட்சகோதரி பவுஸ்தினாவைத் தம் இரக்கத்தின் அப்போஸ்தலராக, செயலாளராகத் தேர்ந்தெடுத்து, அவர் வழியாக உலகிற்குத் தனது மாபெரும் செய்தியை எடுத்துக்கூற விரும்பினார். அவர் கூறினார், "பழைய ஏற்பாட்டில் நான் இறைவாக்கினரை அனுப்பி இடி மின்னல் போன்ற அச்சம் தரக்கூடிய செய்திகளை அனுப்பினேன். இன்று உலகெங்குமுள்ள மக்களுக்கு என் இரக்கத்துடன் உன்னை அனுப்புகிறேன். துயரப்படும் மக்களைத் தண்டிக்க நான் விரும்பவில்லை. மாறாக, அவர்களைக் குணமாக்க, என் இரக்கமுள்ள இதயத்துடன் அணைத்துக்கொள்ள விரும்புகிறேன்". அருட்சகோதரி பவுஸ்தினாவின் பணி மூன்று வேலைகளை உள்ளடக்கியது.

1. இறைவனின் இரக்கம் நிறைந்த அன்பைப்பற்றி வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எமது நம்பிக்கையின் உண்மைகளை, உலகெங்குமுள்ள அனைத்து மனிதருக்கும் அறிவிப்பது.

2. உலகனைத்திற்காகவும், விசேட விதமாக பாவிகளுக்காக இறை இரக்கத்தை வேண்டுவது. இதனை ஆண்டவர் இயேசுவால் முன் வைக்கப்பட்ட இறை இரக்கப் புதிய பக்தி முயற்சிகளால் செயற்படுத்துவது.

3. புனித பவுஸ்தினாவின் புனித வாழ்விற்கான பாதையைத் தேர்ந்தெடுத்து, கிறிஸ்தவ முதிர்ச்சியை இலக்காகக் கொள்வதுடன், உலகிற்காக இறை இரக்கத்தை முன்னெடுத்துச் செல்வது. இப்பாதையில் செல்ல குழந்தை போன்ற நம்பிக்கையும், அயலார் மேல் இரக்கம் காட்டுகின்ற மனப்பான்மையும் உருவாக வேண்டும்.

இன்று இந்த இயக்கம் உலகெங்கிலுமுள்ள கோடிக் கணக்கான மக்களை உள்ளடக்கியுள்ளது. அது துறவறச் சபைகளையும், பக்திச் சபைகளையும், பொது நிலையினருக்கான சபைகளையும், குருக்களையும், பல்வேறுபட்ட இறை இரக்க அப்போஸ்தலிக்கச் சமூகங்களையும், தனிப்பட்டவர்களையும் உள்ளடக்கிப் புனித பவுஸ்தினா வழியாக ஆண்டவர் கொடுத்த பணிகளை மேற்கொள்கிறது.

புனித பவுஸ்தினாவின் பணி, ஆண்டவர் இயேசுவின் கட்டளைப்படி அவரது நாட் குறிப்பில் எழுதி வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திருமறை

## க.பொ.த. சா/த
### மாணவர்களுக்கானது

● போதகர் S. அருமைராஜா - Dip.in.Chr(India)

**17.** மூவொரு கடவுள் தம்மை முழுமையாக வெளிப்படுத்திய சந்தர்ப்பம் ஒன்று தருக?
இயேசுவின் திருமுழுக்கு

**18.** புதிய புதிய கண்டுபிடிப்புக்களினூடாக நாம் விளங்கிக்கொள்வது யாது?
அவற்றினூடாக இறை மகிமை வெளிப்படுகின்றது.

**19.** கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத மனிதன் உயிருள்ளவன் ஆனான். இது எந்த மரபிற்குரியது.?
யாவே மரபிற்குரியது

**20.** இறைவனின் மகிமையை வெளிப்படுத்தும் அவரது வியத்தகு செயல்களுக்கு உதாரணம்?
- நிக்கலஸ், கொப்பனிக்கஸ் - கோள்களின் மையம் சூரியன் என எடுத்துக் காட்டியமை
- கலிலியோ கலிலி - தூர நோக்கியைக் கண்டுபிடித்தமை
- ஐசக் நியூட்டன் - புவியீர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்தமை

**21.** மனிதன் இவ்வுலகிலும், மறு உலகிலும் மகிழ்ச்சியாக வாழ்வதே இறைவனுக்கு மகிமை எனக் கூறியவர்?
புனித இரேனியூஸ்

**22.** மனித ஆரம்பத்தையும், வாழ்வையும் பற்றி வெவ்வேறு விவாதங்களை முன்வைத்தவர்கள் யாவர்?
- சாள்ஸ் டார்வினது பரிணாம வாதம்
- சுமேரிய நாகரீக வரலாறு
- லாப்லாஸ் என்பவரின் முன் மொழிவு

**23.** இறைவன் உலகைப் படைத்து அதனை மனிதனிடம் ஒப்படைத்தது?
அதனை விருத்திசெய்து பாதுகாக்க

**24.** இறை வெளிப்பாட்டின் நோக்கம் யாது?
இறைவன் எழுந்தருளியிருப்பதை வெளிப்படுத்துவது

**25.** மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று, அவனுக்கு தகுந்த துணையை உருவாக்குவேன் (தொ.நூ 2:18) இதன் கருத்து யாது?
மனிதன் சமூகமாக வாழ அழைக்கப்பட்டவன்

**26.** இறைவன் தனது சாயலாக மனிதனைப் படைத்தது?
படைத்தவரைப் பற்றி அறியவும், அன்பு செய்யவும் வேண்டும் எனக் காட்ட

**27.** இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் தனது சுதந்திரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தியதன் விளைவு யாது?
இறைவனுடன் இருந்த அனைத்து உறவுகளையும் இழத்தல்

**28.** கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன என்பதன் கருத்து யாது?
கடவுளின் ஆசீருடனும், விருப்பத்தின்படியும் உலகம் உருவாக்கப்பட்டது என்பது.

**29.** படைப்பின் மேன்மையைக் குறிக்கும் திருப்பாடல்?
104வது திருப்பாடல்

**30.** இறைவன் மோசேக்குத் தம் பெயரை எவ்வாறு வெளிப்படுத்தினார்?
இறைவன் தாம் ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என

**31.** பாஸ்கா மறைபொருள் என்பது யாது?
கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு

**32.** அல்பாவும், ஒமேகாவும் என்பதன் பொருள் என்ன?
தொடக்கமும், முடிவும்

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புனிதர்களை அறிவோம்...!

ஆவணி - 2015

- மற்றில்டா இராஜேந்திரம் -

**ஆவணி 3ந் திகதி :**
**புனித லீதியா**




தியத்திரா எனப்படும் ஊரைச் சேர்ந்தவரே லீதியா எனும் இப்பெண். இப்பகுதி உரோமையருக்குச் சொந்தமான ஆசிய மாகாணத்தின் மேற்கு மத்திய பகுதியாகும். ஊதா வர்ணமூட்டுவதில் மிகப் பேர் பெற்றது இப் பகுதி. லீதியா ஊதா நிறப்பொருட்களை (திருவிவிலியம் செந்நிறம் எனக் குறிப்பிடுகிறது) விற்கும் ஒரு முகவராகப் பிலிப்பி நகரில் சீவியம் நடத்திவந்தார். கி.பி. 55ம் வருடத்தில் தூய பவுல் முதல் தடவையாக இந்நகருக்கு வந்தார். அதுவரை யூத சமயத்தைப் பின்பற்றி 'இறைவனை வணங்குபவர்' எனும் பெயர் பெற்றிருந்த இவர் தூய பவுலின் சக்தி வாய்ந்த போதனை காரணமாகக் கிறிஸ்தவத்தின் திருமுழுக்கைப் பெற்றார். தூய பவுலும் அங்கு தங்கினார். இவரது மனமாற்றமானது ஐரோப்பாவில் குறிப்பிடப்படும் ஆதிக்கிறிஸ்தவர்களின் எடுத்துக்காட்டாக இருந்தது. லீதியா ஒரு பணக்காரச் சீமாட்டி. தூய பவுல், அவரது தோழர்களான லூக்கா, சீலா ஆகியோருடன் பிலிப்பி நகரில் தங்கியபொழுது, உதவிகள் புரிந்து பராமரித்தார். நற்செய்தியாளர் தூய லூக்கா ஆதித் திருச்சபையின் வரலாற்று நூலாகிய 'திருத்தூதர் பணிகள்' நூலில் 16ம் அதிகாரம், 11 தொடக்கம் 15 வரையிலான திரு வசனங்களில் இவரைப் பற்றியும், இச்சம்பவம் பற்றியும் குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, திருவிவிலியத்தில் இப்புனிதை இடம்பெற்றுள்ளார் என அறியமுடிகிறது.

**ஆவணி 4ந் திகதி : புனித ஜோன் மேரி வியான்னி**



அர்ஸ் நகரைக் குணப்படுத்துபவர் எனப் பெயர் வாங்கிய ஜோன் மேரி வியான்னி 1815ம் வருடத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டார். 3 வருடங்களின் பின், பிரான்சியக் குக்கிராமமான அர்ஸ் பங்கின் பங்குக் குருவானார். கிறிஸ்தவ உலகில் ஆன்மாக்களின் பாவ மன்னிப்பு வழிகாட்டியாகவும், அவர்களை இயக்குபவராகவும் நன்கு அறியப்பட்டிருந்தார். இவரது வாழ்வு அர்ப்பணம் நிறைந்ததாக இருந்தது. தன் வாழ்வில் எளிமையைக் கடுமையாகக் கடைப்பிடித்தார். தம் பாவங்களுக்கு மனம் வருந்துவோரும், பேயின் பிடியில் சிக்கியவர்களும் கூட்டம் கூட்டமாக வந்து இவரைச் சூழ்ந்துகொண்டனர். இவரது மாபெரும் பண்பான, அமைதி நிறைந்த அணுகுமுறை அனைவரையும் கவர்ந்தது. மக்கள் கூட்டத்தால் விரும்பப்பட்ட செயல் வீரராக இருந்தார். இந்தக் குருவானவர் கிறிஸ்து பெருமானின் திருஇருதயத்தின் பாதையில் சென்றார். ஒவ்வொரு நாளும் 16 மணித்தியாலங்கள் மக்களுக்கு ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கினார். கருணையும் அன்பும் மிக்க செயல்களால் இவரது வாழ்வு நிறைந்திருந்தது என்றே கூற வேண்டும். இவரது சாதாரண வார்த்தைகளைக் கேட்டே பாவிகள் மனமாற்றம் பெற்றனர் என இவர் பற்றி எழுதப்பட்ட குறிப்புகள் தெரிவிக்கின்றன. இவர் 1859ம் வருடம் வைகாசித் திங்கள் நான்காம் நாளில் இறைபதமெய்தியதுடன் 1925ம் வருடம் வைகாசித் திங்கள் 31ம் நாளில் புனிதராகவும் பிரகடனப்படுத்தப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




— பற்றி

அன்ரன் வீட்டில் ஓய்வாக இருந்தார். அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை, அவரின் வீட்டுவாசலில் கார் ஒன்று வந்து நின்றது. அன்ரனின் வயதை யொட்டிய ஒருவர் காரில் இருந்து இறங்கி வந்தார். அன்ரனுக்கு அவரை அடையாளம் தெரியவில்லை.

"உள்ள வாங்க...."
"அன்ரன் என்னை அடையாளம் தெரியுதா....?"
"இல்லையே...."

"நான்தான் 'சக்திவேல்'. நாம எல்லாம் ஏறாவூர் பள்ளியில ஒன்றாகப் படிச்சனாங்க.... 1970 தொடக்கம் 1973வரை ஞாபகமிருக்கா ....?"

அன்ரனுக்கு ஞாபகம் வந்தது. 'அந்தச் சக்திவேலா இவர்.....?'

அந்தப் பாடசாலையில் 8ம் வகுப்புவரை ஒன்றாகப் படித்தவர். சக்திவேலுக்கு ஒரு தம்பியும் உண்டு. அவனின் பெயர் வெற்றிவேல்.

"இப்ப எங்க, என்ன செய்யிறீங்க சக்தி....?" அன்ரன் கேட்டார்.

"நான் தமிழ் நாட்டில 'கலெக்டராக' இருக்கன்".

அன்ரனுக்கு தூக்கிவாரிப் போட்டுது.

வகுப்பில் அக்காலத்தில் தனித்தனி கதிரை மேசைகள் இல்லை. நீண்ட மேசையும், நீண்ட இருக்கையும்தான்....

அன்ரன் வலது பக்கத்தில் சக்திவேல், இடது பக்கத்தில் சண்முகம், அதற்குப் பக்கத்தில் ராசா. சக்திவேலின் தகப்பனார் அறுந்த செருப்புகள் தைப்பவர். சண்முகத்தின் தகப்பனார் மரணவீட்டுக்குப் பறை அடிப்பவர். ராசாவின் தகப்பனார் நகைத் தொழில் செய்பவர். ஆனால், அவர்களிடையே எவ்வித வேறுபாடும் இல்லை. ஒன்றாய்ப் படித்து ஒன்றாய் உண்டு ஒன்றாய் விளையாடி......

சில ஆண்டுகளுக்குப் பிறகு 'சக்திவேல்' இந்தியா சென்றுவிட்டதாகக் கேள்வி.

கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். சக்தி இந்தியாவிற்குப் போகாமல் இலங்கையில் இருந்திருந்தால் மட்டக்களப்பு வெள்ளைப் பாலத்திற்கு அருகில் மார்க்கட் றோட்டில் செருப்பு தைத்துக்கொண்டிருப்பான்....! அன்ரன் மனதிற்குள் நினைத்துக்கொண்டார்.

(பெயர்கள் தவிர யாவும் நிஜம்)

**தற்காலிக நிர்வாகப் பொறுப்பாளர்**

ஜுலை 27ந் திகதி முதல்
ஆகஸ்ட் 14ந் திகதி வரை
எமது மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய
கலாநிதி: யோசப் பொன்னையா ஆண்டகை
வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.
எனவே, இக்காலப் பகுதியில் மறைமாவட்ட
நிர்வாகப் பொறுப்பாளராகக் மறைமாவட்டக்
குருமுதல்வர் அருந்தந்தை: A. தேவதாசன் அடிகள்
ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசுப் போட்டி
சிறுவர்களுக்கு மட்டும்

# திருவிவிலியம் கற்போம் - 146

முடிவுத் திகதி 31.08.2015

## நீதித் தலைவர்கள் - அதிகாரம் - 7

(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

1. எருபாகால் என்ற கிதியோனும், மக்கள் அனைவரும் அதிகாலையில் எழுந்து அரோது நீரூற்றருகே பாளையம் இறங்கியபோது ........................ பாளையம் மோரே மலைப் பள்ளத்தாக்கில் இறங்கியிருந்தது.

   அ) மிதியானியர் ஆ) அபியேசர் இ) இஸ்ரயேலர்

2. ஆண்டவர் கிதியோனிடம் "உன் மக்கள் அதிகம். எனவே, அவர்களை உங்கள் கையில் ஒப்படைத்தால் 'எம் கையே எம்மைக் காத்தது' என்று இஸ்ரயேலர் எனக்கெதிராக ........................ கொள்வர்" என்றார்.

   அ) கர்வம் ஆ) ஆங்காரம் இ) தற்பெருமை

3. மீண்டும் ஆண்டவர் "நீ மக்களிடம் 'போருக்கு அஞ்சுபவன் போய்விடட்டும்' என்று சொல்" என்றார். உடனே ........................ பேர் திரும்பிச் செல்லப் பத்தாயிரம் பேர் எஞ்சி நின்றனர்.

   அ) 25,000 ஆ) 22,000 இ) 23,000

4. ஆண்டவர் "மக்களை ........................ அழைத்துவந்தால், அங்கே உனக்காக அவர்களைத் தேர்ந்தெடுப்பேன். இவன் உன்னுடன் செல்வான் என யாரைக் குறிப்பிடுகிறேனோ அவன் உன்னுடன் வருவான்" என்றார்.

   அ) மலையடிவாரத்துக்கு ஆ) நீர் நிலைக்கு இ) பள்ளத்தாக்குக்கு

5. தெரிவுசெய்யப்பட்ட முந்நூறு பேரையும் தவிர மற்றவர்களைக் கூடாரத்திற்கு அனுப்பிவிட்டு நின்றபோது இரவில் ஆண்டவர் "எழுந்து பாளையத்துக்கு ........................ என்ற உன் வேலையாளுடன் செல்" என்றார்.

   அ) பூரா ஆ) வீரா இ) மோரா

6. கிதியோன் எல்லைக் காவலுக்குச் சென்றபோது அங்கிருந்த ஒருவன் தன் தோழனிடம் "நான் கண்ட கனவில் ஒரு வாற்கோதுமை அப்பம் மிதியானியரின் பாளையம் வந்து ........................ மோதிக் கீழே விழுந்தது" என்றான்.

   அ) பாளையத்தின் மேல் ஆ) மலையின் மேல் இ) கூடாரத்தின் மேல்

7. அவன் தோழன் "கிதியோனின் ........................ தவிர இதுவேறு ஒன்றுமில்லை. கடவுள் மிதியானியரையும், பாளையம் முழுவதையும் அவர் கையில் ஒப்படைத்துவிட்டார்" என்று விளக்கம் கூறினான்.

   அ) வாளை ஆ) கடவுளை இ) வீரத்தை

8. இவற்றைக் கேட்ட பின்னர் கிதியோன் இஸ்ரயேலின் பாளையத்துக்குத் திரும்பி வந்து "எழுங்கள், மிதியானியரின் ........................ ஆண்டவர் உங்கள் கையில் ஒப்படைத்துள்ளார்" என்றார்.

   அ) மக்களை ஆ) பாளையத்தை இ) வீரர்களை

9. முந்நூறு பேரையும் அழைத்து "நான் செய்வது போலச் செய்யுங்கள். எல்லைக் காவல் வரை சென்று நான் எக்காளம் ஊத, நீங்களும் ஊதி, '........................! கிதியோனுக்காக!' என்று கூறுங்கள்" என்றார்

   அ) இஸ்ரயேலுக்காக ஆ) இறைவனுக்காக இ) ஆண்டவருக்காக

10. நள்ளிரவில் கிதியோனும், நூறுபேரும் எல்லைக் காவலை அடைந்து எக்காளம் ஊதி, பானைகளை உடைத்து, இடக்கையில் நெருப்புப் பந்தங்களையும், வலக்கையில் ........................ ஏந்தி முழங்கினர்.

    அ) எக்காளங்களையும் ஆ) வாள்களையும் இ) கோல்களையும்

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 146

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. போர்த்துக்கேயர் இலங்கையைக் கண்டுபிடித்த செய்தி பேரரசர் வழியாக உரோமைக்கு அறிவிக்கப்பட்டபோது அங்கிருந்த பாப்பரசர்
(10ம் பத்திநாதர் - 2ம் யூலியஸ் - 6ம் யூலியஸ்)

2. முதன் முதலில் விண்வெளியில் பலதடவைகள் வலம்வந்து சாதனை படைத்த வீராங்கனை
(வாலன்டினா - கல்பனா - மேரி கியூரி)

3. பல் சம்பந்தமான குறைபாட்டிற்கும், சிறுநீர்ப் பையில் உள்ள கல்லைக் கரைக்கவும் உதவும் விட்டமின் C கொண்ட பழம்
(வாழைப்பழம் - பப்பாளிப்பழம் - கொய்யாப்பழம்)

4. உலகின் முதலாவது தானியங்கிக் கணினியான 'மார்க் - 1' உருவாக்கப்பட்ட வருடம்
(1905 - 1924 - 1944)

5. அச்சாணியில்லாத தேர் முச்சாணும் ..........
(நகராது - போகாது - ஓடாது)

6. அனைத்துத் தொழிலாளரும் நாளொன்றுக்கு 8 மணிநேரம் வேலை செய்வது பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தினம்
(1887.05.01 - 1885.05.01 - 1886.05.01)

பெயர் : ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்-- 146
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 144 விடைகள்

சீசரா, தெபோரா, கெதேசில், நீதித் தலைவியால், சீசராவை, பாராக்கு, சானாமில், கீசோன், சிதறடிக்க, யாவேல்

## அறிவை வளர்ப்போம் - 144 விடைகள்

1. 1948.02.12
2. 248 ஆண்டுகள்
3. தர்மபாலன்
4. ஜப்பான்
5. நாடாது
6. கலப்புறுப் பொருள்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்கள்

- E. பிரேமிதா,
  90/78, 11ம் குறுக்கு,
  இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.
- செல்வி. அக்ஷிதா டேனிஷா டெரன்ஸ்
  26/15, 3ம் குறுக்கு,
  இருதயபுரம் - மேற்கு,
  மட்டக்களப்பு.

போட்டியின் ஒரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்கள்

- S. மார்க் ரொனி,
  C/O, S. சகாயம்,
  7ம் பிரிவு, கோட்டகொடை,
  ஸ்பிரிங்வெளி.
- டியன் டஹி றாகல்,
  K 59, பனிச்சையடி,
  மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 96 முடிவுகள்**

- முதலாம் பரிசு - 400/=
  கீத் செலர்
  K 9, பனிச்சையடி,
  மட்டக்களப்பு.
- இரண்டாம் பரிசு - 300/=
  யே. மரிய நிதர்சனா,
  இலங்கை மாதா ஆலய வீதி,
  1ம் குறுக்கு,
  இலங்காபுரம்,
  தன்னாமுனை.
- மூன்றாம் பரிசு - 200/=
  டியன் டஹி றாகல்,
  K 59, பனிச்சையடி,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புனித பவுஸ்தினா' ஆலயம்

- போலந்து -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org